பக்கங்கள் 8

# ஈழநாடு The EELANAADU

50 சதம்

மலர் 22 | மாசி 4 | ரபி-ஆகிர் 29 | இதழ் 34

யாழ்ப்பாணம் | திங்கட் கிழமை | 17-3-80

## 'மூச்சு' விட்ட 2 நாட்கள்!

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண மாவட்டத்தின் சரித்திரத்தில், இம் மாதத்தில் இரண்டு நாட்கள் குற்றம் எதுவும் இடம் பெறாத 'கன்னி' நாட்களாக கழிந்திருக்கின்றன!

யாழ் மாவட்டத்தில் உள்ள பதின் மூன்று பொலிஸ்நிலையங்களிலும் குற்றச்செயல்கள் பற்றிய குறிப்பு இடம்பெறாத நாட்களே இல்லை என்ற நிலை நீடித்திருக்கும்போது, இம் மாதம் 2ம் திகதியும் 12ம் திகதியும் யாழ் மாவட்டத்தின் எந்தப் பகுதியிலும் குற்றச்செயல்கள் தலை தூக்கவில்லை. அந்தஇரண்டு நாட்களும் நிம்மதியாக 'மூச்சு' விட்டிருக்கின்றன!

★ ரயில், பஸ்சேவை சீரடையும் அறிகுறி ★

# வடக்கே வரும் 55 புதிய பஸ்;

# அடுத்தவாரம் முதலாக 2-வது ரயில் சேவை!

## அமைச்சர் முகமது தகவல்

(நமது நிருபர் சு. தர்மலிங்கம்)

**வடபகுதி ரயில், பஸ்சேவைகள் இம்மாதம் முதல் மேலும் சீரடையவிருக்கிறது. வடக்கே புதிதாக 55 பஸ்கள் வரவிருக்கும் அதே நேரத்தில் அடுத்தவாரம் முதல் இரண்டாவது (தினசரிஇரவு) ரயில்சேவையும் ஆரம்பமாகவிருக்கிறது.**

''இவ்வருடநடுப்பகுதிக்கிடையில் வடபிராந்திய போக்குவரத்துச்சபைக்கு 55 புதிய பஸ்கள் அனுப்பிவைக்கப்படும். இவற்றில் ஏப்ரல் 15ம் திகதிக்கு முன்னதாக 25 பஸ்களும், ஜூன் மாதத்துக்கு முன்னர் 30 பஸ்களும் அனுப்பி வைக்கப்படும். வடபகுதி மக்களின் போக்குவரத்தை மேலும் விரிவுபடுத்தும்வகையில் இம்மாதம் 24ம் திகதி முதல் கொழும்பு - காங்கேசன் துறை புதிய இரண்டாவது இரவு ரயில்சேவை ஒன்றும் ஆரம்பித்துவைக்கப்படும்'' என்று யாழ்கச்சேரியில் நேற்று நடைபெற்ற மகாநாட்டில் போக்குவரத்து அமைச்சர் அல்ஹாஜ் எம். எச். முகமது தெரிவித்தார்.

இம்மகாநாட்டில் யாழ் மாவட்ட அமைச்சர் திரு.யு.பி விஜயக்கோன் யாழ் மாவட்ட அமைச்சின் செயலாளரும் யாழ் அரசாங்க அதிபருமான திரு. யோகேந்திரா துரைசுவாமி, எதிர்க்கட்சித்தலைவர் திரு. அ. அமிர்தலிங்கம். நல்லூர் எம், பி. திரு. மு.சிவசிதம்பரம், கோப்பாய் எம்.பி. திரு. எஸ். கதிரவேலுப்பிள்ளை, மானிப்பாய் எம், பி திரு. வி. தர்மலிங்கம், ஊர்காவற்றுறை எம். பி. பண்டிதர் கா.பொ. இரத்தினம், பருத்தித்துறை எம். பி. திரு. கே. துரைத்தினம், கிளிநொச்சி எம். பி. திரு. வி. ஆனந்தசங்கரி, யாழ்ப்பாணம் எம்,பி திரு.வி.யோகேஸ்வரன் மற்றும், வடபிராந்திய போக்குவரத்துச் சபைத் தலைவர் திரு. டட்லி குணசேகரா மற்றும் உயர் அதிகாரிகளும் கலந்து கொண்டனர்.

அமைச்சர் தொடர்ந்து பேசுகையில்: வடபகுதி மக்களின் போக்குவரத்தைச் சமாளிப்பதற்காக கூடிய பாரிய பஸ்கள் வடபிராந்தியத்திற்கு அனுப்பிவைக்கப்படும்'' என்று கூறினார். (கொ)

## புதிய ரயில் சேவை

(யாழ்ப்பாணம்)

காங்கேசன்துறை - கொழும்புக்கான புதிய இரண்டாவது (இரவு) ரயில் சேவை, இம்மாதம் 24-ந் திகதிமுதல் ஆரம்பமாகும்.

காங்கேசன்துறையிலிருந்து தினமும் இரவு 8-45க்கு புறப்படும் இப்புதிய இரண்டாவது ரயில் அடுத்தநாட்காலை 6 மணிக்கு கொழும்புக் கோட்டையைச் சென்றடையும். இதேபோல் தினமும் இரவு 9 மணிக்கு கொழும்பிலிருந்து புறப்படும் இரண்டாவதுரயில் அடுத்தநாட்காலை 6 மணிக்கு யாழ்ப்பாணத்தை வந்தடையும். (கொ)

## "வலதுகுறைந்தோர் இந்நாட்டில் திறமையாக பணியாற்றுகிறார்கள்"

### புனர்வாழ்வு இல்லத் திறப்புவிழாவில் பேச்சு

(யாழ்ப்பாணம்)

''இந்த நாட்டில் வலது குறைந்தோர் பலவழிகளிலும் திறமைமிக்கவர்களாகவே இருக்கிறார்கள். அவர்கள் தமது புலன்களை, செய்யும் தொழிலில் செலுத்துவதால் மற்றையவர்களிலும் பார்க்க சிறப்பாக பணிபுரிகிறார்கள். இலங்கையில் திறமைமிக்க தொலைபேசி இயக்குநராக பணிபுரியும் பெண்மணியொருவர் இரு கண்களிலும் பார்வை இழந்தவர்''

இவ்வாறு யாழ். லயன்ஸ் கழகத்தினரால் அமைக்கப்பட்ட ஊனமுற்றவர்களுக்கான புனர்வாழ்வு இல்ல திறப்புவிழாவில் பிரதமவிருந்தினராக கலந்துகொண்டு இல்லத்தை திறந்துவைத்து உரையாற்றிய மாவட்ட லயன்ஸ்கழக ஆளுநர் லயன் டாக்டர் டபிள்யு. ஏ. பேர்டினட் தெரிவித்தார்.

வைபவத்திற்கு யாழ். லயன்ஸ் கழகத் தலைவர் லயன் டாக்டர் எஸ் சபாரெத்தினம் தலைமை வகித்தார். வைபவத்திற்கு முன்பாக இந் நிலையத்தை அமைப்பதற்கு ஊனமுற்ற நிலையிலும் ஆலோசனை வழங்கி கடந்த மாதம் அமரத்துவம் அடைந்த, வேலணையூர், எம். தனிநாயகத்தின் உருவப்படம் திரை நீக்கம்செய்துவைக்கப்பட்டது.

டாக்டர் பேர்டினட் உரையாற்றுகையில் மேலும் கூறியதாவது: ''இன்று யாழ் மாவட்டத்தைச் சேர்ந்த சமூக சேவை எண்ணங்கொண்ட பெருந்தொகையான பெரியார்கள் ஒருங்கிணைந்து அமர்ந்திருப்பதைக் கண்டு மகிழ்வடைகின்றேன். இந்த நிலையம். ஊனமுற்றவர்களுக்கு தங்கும் நிலையமாக மட்டும் அமையாது, அவர்களது வாழ்வை வளமாக்கும் திட்டமிடல் நிலையமாகவும் செயல்படும். இந்நிலையத்தை நல்லமுறையில் நடாத்துவதற்கு சகல மக்களும் தம்மாலான [illegible]

புனர்வாழ்வு நிலைய அமைப்புச் செயற்குழுத்தலைவரும் வடபிராந்திய இலங்கை வங்கி முகாமையாளருமான எம்.ஜே. ஏ. ஜெயநாதன் உரையாற்றுகையில்:- ''இந்நிலையம் எமது 'உதவும்கரங்கள்' திட்டத்தின்

(8-ம் பக்கம் பார்க்க)

பிரிட்டிஷ் பாராளுமன்றத்தில்

## ஒலிம்பிக் பகிஷ்கரிப்பு

### பிரேரணை இன்று நிறைவேறும்

(லண்டன்)

மாஸ்கோவில் நடைபெறும் ஒலிம்பிக் போட்டியைப் பகிஷ்கரிக்குமாறு கோரி பிரிட்டிஷ் பிரதமர் திருமதி தட்சர் சமர்ப்பித்த பிரேரணை, பிரிட்டிஷ் பாராளுமன்றத்தில் இன்று நிறைவேறும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

ஆனாலும் இப் பிரேரணை; பொதுமக்கள், பத்திரிகைகள் மற்றும் பிரிட்டிஷ் ஒலிம்பிக் கோஷ்டி ஆகியவற்றின் கடுமையான எதிர்ப்புகளுக்கு மத்தியிலேயே இன்று நிறைவேற்றப்படுகிறது.

கடைசியாக, கடந்தவாரம் மேற்கொள்ளப்பட்ட மக்கள் கணிப்பில், 63 சத விகிதத்தினர் பகிஷ்கரிப்புக் கோரிக்கைக்கு எதிர்ப்புத் தெரிவித்திருந்தனர்.

## கான்ஸ்டபிள் அடையாளம் காட்டினர்!

(புலோலி)

ஐ. தே. க. வடபிரதேசப் பிரதம அமைப்பாளர் திரு. கணேசலிங்கத்தைக் கொலை செய்ய முயன்றதாக குற்றம் சாட்டப்பட்ட சந்தேகநபர்கள் நேற்றுமுன்தினம் அடையாள அணிவகுப்புக்குட்படுத்தப்பட்டனர்.

கடந்தவருடம் மே மாதம் திரு. கணேசலிங்கத்தின் வீட்டில் நடைபெற்ற துப்பாக்கிப் பிரயோகம் தொடர்பாக செல்லச்சாமி,குமார் தனபாலசிங்கம் விஜயசிங்கம் ஆகி

(8-ம் பக்கம் பார்க்க)

புத்தம் புதிய கிடைத்தற்கரிய
HONDA மோட்டார் சைக்கிள்கள்
விலைகள்
Benly Super ரூபா 11,950-00
C. G. 125 ரூபா 13,500-00
உடன் விற்பனைக்குண்டு.
ஏனைய மொடல்களும் உண்டு. தொடர்புகொள்க
15, செல்.பீற்றேஸ் லேன்
ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
போன்: 7342 (5230)

★ நாஷனல் றேடியோக்கள்
★ நாஷனல் கசட்டுகள்
★ நாஷனல் ரெலிவிசன்கள்
★ நாஷனல் மேசை விசிறிகள்
★ நாஷனல் வீடியோ றெக்கோடர்கள்
மற்றும் பலதரப்பட்ட
★ உள்நாட்டு வெளிநாட்டு றேடியோக்கள்
★ ஒலிப்பதிவு செய்யப்பட்ட கசட் ரேப்புகள்
★ றேடியோ உப உறுப்புக்கள்
★ T. V. பூஸ்ரர், ஏரியல், ஏரியல் வயர்
மற்றும் றேடியோ சம்பந்தமான விபரங்களுக்கு
V. K. இராசரத்தினம்,
95, ஸ்ரான்லி வீதி - யாழ்ப்பாணம்.
போன்: 7447.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வரி விளம்பரம்

## தேவை

குறைந்தது இரண்டுவருடம் அனுபவமுள்ள Operators தேவை. நற்சாட்சிப்பத்திரத்துடன் நேரில் அல்லது கடித மூலம் தொடர்பு கொள்ளவும். உரிமையாளர், லிபேட்டி சினிமா, அச்சுவேலி. 5218

திருநெல்வேலி வளாகக் கட்டடங்களுக்கு மூவாயிரம் கியூப் அரியாலை நிரப்பு மணலும் மூவாயிரம் கியூப் செம்பாட்டு மண்ணும் தேவை. வாகன வசதியும் விருப்பமும் தகுதியும் உள்ளவர்கள் 19-3-80 க்கு முன் காலை 9 மணிக்கும் 12 மணிக்கும் இடையில் நேரில் வரவும். மனோகரன் அன்ட் வெற்றிவேல் எஞ்ஜினியேர்ஸ் - கொன்ருக்ரேஸ் 11சி, மொம்சாக் மாளிகை (மேல்மாடி) ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். 5234

யாழ்ப்பாணத்தில் உள்ள வேலைத் தலங்களுக்கு திறமையான மேசன்மார், தச்சர், கம்பி வேலையாட்கள் மற்றும் கூலியாட்கள் தேவை. தகுதி உள்ளவர்கள் 19-3-80 க்கு முன்னர் காலை 9 மணிக்கும் 12 மணிக்குமிடையில் கீழ் வரும் விலாசத்தில் நேரில் சந்திக்கவும். மனோகரன் அன்ட் வெற்றிவேல் எஞ்ஜினியேர்ஸ் - கொன்ருக்ரேர்ஸ் 11சி, மொம்சாக் மாளிகை (மேல்மாடி) ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். 5235

தகமையும் முன் அனுபவமும் உள்ள கட்டட மேற்பார்வையாளர்கள் மற்றும் குவாண்ரிற்றி சேர்வையேர்ஸ் தேவை. தகுதியுள்ளவர்கள் மாத்திரம் 20-3-80 க்கு முன்னர் சான்றிதழ்களுடன் விண்ணப்பிக்கவும். மனோகரன் அன்ட் வெற்றிவேல் என்ஜினியேர்ஸ்- கொன்ருக்ரேர்ஸ் 11சி, மொம்சாக் மாளிகை ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். 5236

யாழ். வண்ணை ஸ்ரீ வெங்கடேச வரதராஜப் பெருமாள் கோவிலுக்கு காவலாளிகள் தேவை. 60 வயதிற்கு மேற்படாத ஆண்களிடமிருந்து மேற்படி பதவிக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. எதிர்பார்க்கும் சம்பளத்தைக் குறித்து 21-3-80 க்குப் பிந்தாமல் விண்ணப்பிக்கவும். முகாமை அறங்காவலர். 5240

## தேவை

யாழ். நகருக்குள் நல்ல வசதியுடைய வீடு அல்லது கிட்டங்கி வாங்குவதற்கு உடன் தேவை. நல்ல விலை கொடுத்து வாங்கப்படும். விபரங்களுக்கு றேடியோ மனுவல், ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். 5246

## விற்பனைக்கு

நல்ல நிலைமையிலுள்ள ஒஸ்ரின் கேம்பிறிஜ் (Austin Cambridge) ஈ என் மொடல் கார் விற்பனைக்கு உண்டு. இடம்: சந்திரா பெனியன் கம்பனி, பிறவுண் வீதி, 4ம் ஒழுங்கை, யாழ்ப்பாணம் 5223

நல்ல நிலையில் ஒஸ்டின் வான் A60 உடன் விற்பனைக்கு உண்டு தொடர்பு கொள்க: பா. ஹரிச்சந்திரா, பார்மணியம் ரேட், தெல்லிப்பளை. 5227

## விளம்பரம்
## தெல்லிப்பழை கிராமாட்சி மன்றம்
## பழைய தட்டச்சுக்கள் விற்பனை

இச்சபையில் இரண்டு பழைய தட்டச்சுக்கள் (ஆங்கிலம்-1, தமிழ்-1) விற்பனைக்கு உண்டு. வாங்க விரும்புபவர்கள் கூறு விலைகளை 31-03-80ம் திகதிக்கு முன்பாக எனக்குக் கிடைக்கும் வண்ணம் பதிவுத்தபால் மூலம் அனுப்பி வைக்கவும். தபால் மேலுறையில் இடதுபக்க மேல் மூலையில் 'பழைய தட்டச்சுக்கான கூறுவிலைகள்' எனக் குறிக்கப்பட்டிருப்பதுடன் தபாலுறை அரக்கு முத்திரை இடப்பட்டும் இருத்தல்வேண்டும். அதியுயர்ந்த கேள்விக்காரருக்கு பொருள் கொடுக்கப்படும். தெரிந்தெடுத்த கேள்விக்காரர் என்னால் அறிவிக்கப்பட்டு முழுப் பெறுமதியையும் ஒரு கிழமைக்குள் செலுத்தத் தவறின் அவரது கேள்வி நிராகரிக்கப்படும். கந்தோர் அலுவலக நேரங்களில் பொருட்களை இவ்வலுவலகத்தில் பார்வையிடலாம்.

க. மகாதேவா
விசேட ஆணையாளர்
தெல்லிப்பழை
5243 கிராமாட்சி மன்றம்.

## AUCTION SALE

At No. 65, Main street, Jaffna, on *10-04-1980* commencing at *9-30* a. m. of unredeemed pledges pawned untill *31-12-1977*, with Mr. Sanmugam Mahadeva.

V. S. CUTTIPILLAI
Auctioneer.
Vannarponnai. 5169

## கேள்விப்பத்திரம்
### ஊர்காவற்றுறை
### ப. நோ. கூ. சங்கம்
### ஊர்காவற்றுறை

5322 (ஐயாயிரத்து முந்நூற்றி இருபத்திரண்டு) வெற்றுச் சாக்குகளுக்கு கேள்விப பத்திரம் கோரப்படுகிறது ரூபா 2-50 சதப் செலுத்தி சங்கத்தில் இருந்து பெறப்பட்ட பத்திரத்தில் 'பதில் பொது முகாமையாளர்', ஊர்காவற்றுறை ப. நோ. கூ. சங்கம் என்னும் விலாசத்திற்கு பதிவுத் தபாலிலோ அல்லது நேரிலோ கேள்விப்பத்திரங்களை 22-3-80ம் திகதிக்கு முன் அனுப்பி வைக்கவேண்டும். கேள்விப்பத்திரங்கள் 21-3-80ம் திகதி பகல் 12-00 மணிவரை விநியோகிக்கப் படும். விண்ணப்பதாரர் ரூபா 750/- வைப்புப் பணம் செலுத்தி இருத்தல்வேண்டும்,

பதில்
பொது முகாமையாளர்
ஊர்காவற்றுறை.
15-3-1980. 5245

## சுன்னாகம் பட்டணசபை
## கேள்வி விளம்பரம்

சுன்னாகம் சந்தைக்குத் தெற்குப் பக்கத்தில் 14 கடைகள் கொண்ட கட்டடம் ஒன்று அமைப்பதற்கு, இரு பிரதிகளைக் கொண்ட முத்திரையிடப்பட்ட கேள்விகள் 1980 - 04 - 11 ஆந் திகதி காலை 10-00 மணிவரை என்னால் ஏற்றுக் கொள்ளப்படும்.

ரூபா 100000/-மும் அதற்கு மேற்படவும் செலவாகும் கட்டட வேலைக்கென ஏதாவதொரு அரசாங்கத் திணைக்களத்தின் அல்லது உள்ளூராட்சி மன்றத்தின் அல்லது கூட்டுத் தாபனத்தின் பதிவு செய்யப்பட்ட ஒப்பந்தகாரர்களுக்குக் கேள்விப் பத்திரங்கள் வழங்கப்படும்.

விரும்பும் கேள்வியாளர்கள், மீளளிக்கப்படக்கூடிய வைப்புப் பணமாக ரூபா.300/-ம், கேள்விப்படிவ விலையாக ரூபா. 100/-ம் இவ்வலுவலகத்தில் 1980 - 04 - 09 ஆந் திகதி பகல் 12-00 மணிக்கு முன்னதாகச் செலுத்தி பதிவுச் சான்றிதழ்களையும் பற்றுச்சீட்டையும் சமர்ப்பித்துக் கேள்விப்படிவங்களைப் பெற்றுக் கொள்ளலாம்.

மேலதிக விபரங்களை வேலை நாட்களில் இவ்வலுவலகத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

பொ.பாலசிங்கம்,
விசேட ஆணையாளர்,
சுன்னாகம் பட்டணம்.

விசேட ஆணையாளர்
அலுவலகம்,
சுன்னாகம் பட்டணம்,
11 - 03 - 80.

5228

## வாசுதேவா யாழ். வருகிறார்

(யாழ்ப்பாணம்)

புதிய சமசமாஜக் கட்சித் தலைவர் திரு. வாசுதேவ நாணயக்காரா இம்மாத இறுதியில் யாழ்ப்பாணம் வருகின்றார்.

இம்மாதம் 30ம் தேதி பருத்தித்துறையில் நடைபெறும் கருத்தரங்கில் திரு. வாசுதேவா உரையாற்றுவார். 31ம் தேதி ... அலுவலகத்தில் ... உறுப்பினர்களைச் சந்திப்பார். [க-அ]

## கே. ஜி. எக்ஸ்பிரெஸ் பஸ் சேவை

சாயக்கூடிய, வசதியான, ஆடம்பரமான பஸ்கள் தினசரி கீழ்க்கண்ட இடங்களிலிருந்து புறப்படும்.

### கொழும்பு / யாழ்ப்பாணம்

வெள்ளவத்தை மாணிக்க விநாயகர் கோவிலடி
லோரன்ஸ் ரோட் — இரவு 7-30 மணி
கோட்டை புகையிரத நிலையம் — இரவு 8-00 மணி

### யாழ்ப்பாணம் / கொழும்பு

வெலிங்டன் தியேட்டர், யாழ்ப்பாணம் இரவு 8-00 மணி

முன்பதிவு செய்யும் இடங்கள்.

இராஜேஸ்வரி ஹோட்டல்,
69, நொறிஸ் ரேட், கோட்டை.
தொலைபேசி: 25939 பிற்பகல் 2-00 மணிமுதல் இரவு 7-00 மணிவரை

பிளாசா தியேட்டர், வெள்ளவத்தை.
தொலைபேசி: 88070 பிற்பகல் 1-30 மணிமுதல் இரவு 10-00 மணிவரை

காமினி தியேட்டர், மருதானை.
தொலைபேசி: 93810 காலை 9-00 மணிமுதல் இரவு 10-00 மணிவரை

வெலிங்டன் தியேட்டர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 559 காலை 8-00 மணிமுதல் இரவு 10-00 மணிவரை

கட்டணம் ரூ. 50/- (ஒரு வழி மட்டும்)

பயணம் செய்யும் போது பணத்தை உங்களுடன் எடுத்துச் செல்லவேண்டியதில்லை. கீழ் குறிப்பிட்ட இடங்களில் உங்கள் பணத்தை ஒப்படைக்கவோ பெற்றுக் கொள்ளவோ முடியும்.

★ பிளாஸா தியேட்டரில் ரூபா 1000/-க்கு உட்பட்ட தொகை ஒப்படைக்கவோ அல்லதுபெற்றுக் கொள்ளவோ முடியும்

| | |
|---|---|
| கே. ஜி. இன்டஸ்ரீஸ், ஸ்ரீ சங்கராஜமாவத்தை, கொழும்பு. வெலிங்டன் தியேட்டர், யாழ்ப்பாணம். | எத்தொகையும் ஒப்படைக்கவோ பெற்றுக்கொள்ளவோ முடியும் |

★ காலை 6 மணிக்கு பஸ்கள் கொழும்பு/யாழ்ப்பாணம் சென்றடையும்

5133

## தமிழ் தொழிற்சங்க கூட்டணியுடன் இணைந்து மேதினம் கொண்டாட முடிவு

(யாழ்ப்பாணம்)

வழமைபோல் இம்முறையும் மேதினத்தை தமிழ் தொழிற் சங்கக் கூட்டணியுடன் இணைந்து கொண்டாடுவதென தமிழர் விடுதலைக் கூட்டணி செயற்குழு தீர்மானித்தது.

மேதினக் கொண்டாட்டங்கள் தொடர்பான நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு திருவாளர்கள் மாவை சேனாதிராஜா, வண்ணை அனந்தன், அகஸ்தியர் ஆகியோரடங்கிய குழுவொன்றை நியமிப்பதெனவும் தீர்மானிக்கப்பட்டது.

இப்பாதம் 18ம் திகதி தேர்தல் மாவட்ட அபிவிருத்திச் சபைக்குழு முன் சாட்சியமளிப்பதென்றும் செயற்குழு தீர்மானித்தது.

[கா-இ]

## திருமணத் திருமுகம்



மணமகன்
**T. S. பேரின்பநாதன்**
மணமகள்
**யோகமலர்**

காலம்:
22-03-80 சனிக்கிழமை பி. ப. 2-30 -- 3-30

இடம்:
**THE GROVE CENTRE**
2, JEWS WALK, FOREST HILL, LONDON S. E. 26

வரவேற்பு:
**61, HAWKESFIELD ROAD,**
LONDON S. E. 23 2 T N

| | |
|---|---|
| திரு, திருமதி சுப்பிரமணியம், 41, கேசாவில் வீதி, வண்ணார்பண்ணை. | திருமதி தனபாலசிங்கம் 48 A, பெர்னாண்டோ வீதி, கொழும்பு-06 |

5247

## ஈட்டு விற்பனவு விளம்பரம்

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டில் ஈடு/12531-ம் இலக்க வழக்கில் வாதிகள் யாழ்ப்பாணம் அரியாலை 10/3, நடுத்தெருவன் கந்தையா வல்லிபுரத்துக்கும் மனைவி நாகம்மாவுக்கும் விற்பனவு திகதி வரை போகவேண்டிய தீர்வைத்தொகை ரூபா 14,349-71 சதமும் வழக்குச்செலவு ரூபா 535-55 சதமும் விற்பனவுச் சலார்களும் இதில் கொடுபட்ட ரூபா 9000 கழித்து மிகுதித் தொகையை பிரதிவாதி யாழ்ப்பாணம் அரியாலை 19, கண்டி வீதி, க. சி செல்லத்துரை கைம்பெண் செல்லம்மாவிடம் அறவிடுவதற்காக எனக்களித்த அதிகாரத்தின்படி வழக்கில் சம்பந்தப்பட்ட கீழ் விபரிக்கப்படும் ஆதனங்கள் 08-04-1980 செவ்வாய்க்கிழமை காலை பத்து மணி தொடக்கம் அவ் அவ்வாதனத்தில் நின்று பிரசித்த ஏலத்தில் என்னால் விற்கப்படும்.

### ஆதனங்கள் விபரம்

1. வடமாகணம் யாழ்ப்பாண மாவட்டமும் பகுதியும் சுண்டிக்குளிக் கோவிற்பற்று சிவியாதெரு இறை ''அத்திக்காடு வளவு'' நில. பர. 4 பயிர்களும், இதன் எல்லைக்காரர்கள். கிழக்கு செல்லையா மனைவி அன்னப்பிள்ளை, வடக்கு கண்டி வீதி, மேற்கு செல்லையா மனைவி பொன்னம்மா, தெற்கு நாகலிங்கம் கைம்பெண் முத்தாச்சியின் உரிமைக்காரர்கள். யாழ். பதிவு D 250/213.

2. மேற்படி யாழ்ப்பாண மாவட்டம் வலிகாமம் கிழக்குப் பகுதி கோப்பாய் கோவிற்பற்று கோப்பாய் தெற்கிறை ''கண்ணன்பிரிவு சாலியகொட்டி வயல் சாலியாகோட்டை மறுபெயர் சின்னத்தோட்டம்'' நில. பர. 51, குளிகள் 1½ இதன் எல்லைக்காரர்கள் கிழக்கு கணபதிப்பிள்ளையின் உரிமைக்காரர்கள், வடக்கு பொன்னுத்துரையின் பிள்ளைகள், மேற்கு ரேட்டு, தெற்கு மகேசன் மனைவி லெட்சுமியும் மற்றவர்களும். யாழ். பதிவு K 200/64.

வி. செ. குட்டிப்பிள்ளை,
விற்பனை ஆணையாளர்.
343, கே. கே. எஸ். வீதி,
யாழ்ப்பாணம். (5238)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### மணிவாக்கு

எங்களிடம் ஒ நபைத்தியக்காரன் வந்து குடியாயிருந்து கொண்டான். அப்போது என்ன செய்யவேண்டும்? அகிம்சைப்படி செய்யக்கூடிய சிகிச்சை யாது? இதற்கு எளிமையான விடை அவனைச் சுதந்திரமாக வாழ அனுமதிப்பதொன்றேயாகும்.

— மகாத்மாகாந்தி

## "விஞ்ஞான கண்டுபிடிப்பாளர்களுக்கு உதவி வழங்கப் படவில்லை

### பிலிப்பைன்ஸ் பேராசிரியர் கவலை

(யாழ்ப்பாணம்)

"இதுவரை காலமும் இலங்கை விஞ்ஞான கண்டுபிடிப்பாளர்கள் சரியான வழியில் கொண்டு செல்லப்படவில்லை. அவர்களுக்கு தேவையான உதவிகளும் வழங்கப்படவில்லை என அறிந்து கவலை அடைகின்றேன்"

இவ்வாறு யாழ்ப்பாணம் செயலக மண்டபத்தில் நடைபெற்ற, யாழ் மாவட்ட விஞ்ஞானக் கண்டுபிடிப்பாளர்கள் மாநாட்டில், இலங்கையில் விஞ்ஞான வளர்ச்சியை ஊக்குவிப்பதற்க, இலங்கை விஞ்ஞானிகளுக்கு ஊக்கம் அளிப்பதற்காக, ஐ. நா. ஆலோசகராக இலங்கை வந்துள்ள, பிலிப்பைன்ஸ் ஐ. நா. மனித அறிவு வள ஸ்தாபனத்தின் கமிஷனர் பேராசிரியர் சண்டிலான் குறிப்பிட்டார்.

மாநாட்டிற்கு, யாழ் மாவட்ட அரசாங்க அதிபரும், மாவட்ட அமைச்சின் செயலாளருமான திரு. யோகேந்திரா துரைசுவாமி தலைமை வகித்தார். வர்த்தக கப்பல் துறை அமைச்சின் செயலாளர் திரு ஏ. அபயக்கோனும் மாநாட்டில் கலந்துகொண்டார்.

திரு. சண்டிலான் உரையாற்றுகையில் மேலும் கூறியதாவது:

"இலங்கையில் நிறுவப்பட்டுள்ள விஞ்ஞான கண்டுபிடிப்பாளர் சபை கண்டுபிடிப்பாளர்களுக்கு உதவும்.

நிதியுதவி, பட்டப் பாதுகாப்பு, தொழில் நுட்ப வசதிகளை வழங்கும். இந்த நாட்டில் விஞ்ஞான உதவிகளை ஊக்குவிப்பதற்கு, பாடசாலை விஞ்ஞானக் கழகங்களின் ஒத்துழைப்பைப்பெறவேண்டும்'

அரசாங்க அதிபர் திரு. யோகேந்திரா துரைசுவாமி உரையாற்றுகையில், 'யாழ்ப்பாண விஞ்ஞானிகள் சிறந்த கற்பனை வளமும், நுணுக்கமான அறிவும்நிரம்பியவர்கள். அவர்களது கண்டுபிடிப்புக்களை நன்கு ஊக்குவிக்கவேண்டும். இதற்கு இன்றைய அரசு, விஞ்ஞான கண்டுபிடிப்பாளர் சபை பிராந்திய அலுவலங்களை நிறுவ உதவவேண்டும்' என்றார்.

வர்த்தக கப்பல் துறை அமைச்சின் செயலாளர் திரு. ஏ. அபயக்கோன் உரையாற்றுகையில், 'விஞ்ஞான வளர்ச்சியை இந்தநாட்டில் ஊக்குவிப்பதற்காக விஞ்ஞானகண்டுபிடிப்பாளர் சபை அடுத்த மாதம் உலக கருத்தரங்கொன்றையும் நடாத்தவுள்ளது.

இத்திட்டம் வெற்றிபெற, சகல மகாவித்தியாலய விஞ்ஞானக் கழகங்கள் உதவவேண்டும் என்றார். (கொ-கு)

### மக்கள் கருத்து

## இம்மாணவர் குறை நீங்குமா?

உரும்பராய் இந்துக்கல்லூரி உயர்தர மாணவர்களுக்குப் பௌதிக ஆசிரியர் இல்லாத குறை இருந்துவருகின்றது. அடுத்த ஏப்ரல் மாதம் நடைபெறவுள்ள க. பொ. த. உயர்தர பரீட்சையில் தோற்றவிருக்கும் மாணவர்களுக்கு இப்பாடத்தில் 2/3 பகுதிகள் கற்பிக்கப்படாமல் இருக்கின்றது. குறைந்தபட்ச அறிவுடனேயே பெரும்பாலான மாணவர்கள் பரீட்சைக்குத் தோற்றவேண்டியுள்ளது வசதிபடைத்த சில மாணவர்கள் டியூசன் கல்வியைப் பெற்றாலும் எல்லா மாணவர்களுக்கும் இவ்வசதி இல்லை. இந்நிலையில் இந்த மாணவர்களுக்கு பௌதிக ஆசிரியர் ஒருவரைத் தருவித்து, மேலதிக வகுப்புக்களையும் நடாத்தி மாணவர்கள் பரீட்சையில் வெற்றிபெற வழிவகை செய்யவேண்டிய கல்லூரி நிர்வாகம் மௌனமாக இருந்து வருவது மாணவர்களுக்கும், பெற்றோர்களுக்கும் அதிருப்தியை ஏற்படுத்தியுள்ளது. இவ்விஷயம் தொடர்பாகக் கல்லூரி அபிவிருத்திச் சங்கமும் மாணவர் நலன்கருதி எவ்வித முயற்சியும் எடுக்கவில்லை. கல்லூரிக் கட்டிடங்களை உயர்த்திவிட்டால் போதும் என அபிவிருத்திச் சங்கங்கள் எண்ணிவிடக்கூடாது. மாணவர்களின் கல்வியில் போதிய கவனம் செலுத்துதலே இவற்றின் முக்கிய நோக்கமாக இருக்கவேண்டும்.

எனவே சம்பந்தப்பட்டவர்கள் உடன் இவ்விஷயம் தொடர்பாக நடவடிக்கை எடுக்கவேண்டுமென வேண்டுகிறேன். இவ்வாறு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டாலே அடுத்த ஆகஸ்ட் மாதப் பரீட்சையில் தோற்றவிருக்கும் மாணவர்கள் பௌதிக பாடத்தில் போதிய அறிவைப்பெற முடியும்.

**மணியம் சிவகுமாரன்**
வேம்பன் வீதி,
உரும்பராய்.

⁂ ⁂ ⁂

## புறக்கணிப்பா?

அண்மையில் இளம் கலைஞர் மன்றத்தினர் நடாத்திய தியாகராஜ உற்சவ விழா இசைக் கச்சேரிகளைக் கேட்டோம். முக்கியமாக முதிய இசைக் கலைஞர் ஊரிக்காடு நடராசாவின் கச்சேரியையும் கேட்டோம். பலர் பாராட்டி ரசித்த கச்சேரி அவருடையது. அப்படி இருந்தபோதிலும் வானொலிக் கூட்டுத்தாபனத்தினர் ஒலிபரப்பிய நிகழ்ச்சித் தொகுப்புகளில் அவரது கச்சேரி இடம் பெறவில்லை. வேறு கலைஞர்களின் பாட்டுகளை ஒலிபரப்பினார்கள். ஏன் இந்தப் பாரபட்சம் என்று பலர் பேசிக்கொள்ளுகிறார்கள் இலங்கை வானொலியில் ஏறக்குறைய 25 வருடங்களுக்குமேல் உயர்ந்த தராதரத்தில் பாடிவந்துள்ள திரு. நடராசாவின் பாட்டை ஒலிபரப்பாத காரணம் உயர்தர பாடகர்களைப் புறக்கணிப்பதா, மட்டம்தட்டுவதா என்பதை இலங்கை வானொலி கூட்டுஸ்தாபனம் ஆராயவேண்டும்.

—முருகன் இராசன், சூ. ஜோசேப் ஞானரத்தினம், நா. மார்க்கண்டு, கி. [illegible]சியஸ், ந. கந்தையா
ஏழாலை



## தவக்கால நற்சிந்தனை

நான் அல்லேன்
(லூக். 32 ; 54 - 62)

இயேசுவைப் பிடித்து கைகளைக் கட்டி இழுத்துச் செல்கிறார்கள். இராயப்பரோ சற்றுத் தொலைவில் இயேசுவைப் பின்பற்றி செல்கிறார். பெரியகுருவின் வீட்டு முற்றத்தை அடைகிறார். இயேசுவுக்கு என்ன நடக்கப் போகிறதோ என்று அறிய விரும்புகிறார். வெளிமுற்றத்தில் ஊழியர்கள் கூடி இயேசுவைப் பற்றியும் அவருடைய சீடர்கள் பற்றியும் பேசுவதை இராயப்பா கேட்டுக்கொண்டிருக்கிறார்.

ஒரு ஊழியக்காரி இராயப்பரை நோக்கி நீயும் அவர்களுள் ஒருவன் என்றார். இராயப்பரோ "நான் அல்லேன்" என்றார். இயேசுவைத் தனக்குத் தெரியாது என மும்முறை மறுதலித்து முடிந்ததும் இயேசு இராயப்பர் பக்கம் திரும்பினார் ...

"விழித்திருந்து செபியுங்கள்" என்று ஏற்கனவே இயேசு அவர்களை எச்சரித்திருந்தார். நான் உம்மோடு சிறைக்கும் சாவுக்கும் செல்வேனெனக் கூறிய இராயப்பர் இப்பொழுது அழுகிறார். மனம் வருந்துகிறார், இயேசுவைப் பார்க்கிறார்.

நானும் இராயப்பரைப் போல பல நேரங்களில், சந்தர்ப்பங்களில் சீவிக்கவில்லையா! இயேசுவையும் அவருடைய போதனையையும் மறுதலிக்கவில்லையா! முகத் தாட்சணியத்தினால் கேலி செய்வார்களே என்று பயந்து சரியானதைச் செய்யாமல் விட்டுவிடவில்லையா? இயேசு வைப்பார்!

—வண. மேரி பஸ்ரியன் அடிகள்

யாழ். விஞ்ஞான

## கண்டுபிடிப்பாளருடன் பிலிப்பைன்ஸ் பிரமுகர் ஆலோசனை

(யாழ்ப்பாணம்)

இலங்கை விஞ்ஞானக் கண்டுபிடிப்பாளர் அதிகார சபைக்கு ஆலோசனை வழங்கும் பொருட்டு இங்கு வந்துள்ள பிலிப்பைன்ஸ் நாட்டின் ஐ. நா. மனிதவள ஸ்தாபனக் கமிஷனர் பேராசிரியர் சண்டிலான் யாழ்ப்பாணத்தில் உள்ள கண்டுபிடிப்பாளர்களுடன் ஆலோசனை நடாத்தினார்.

வர்த்தக அமைச்சரின் அழைப்பின் பேரில் கொழும்பு வந்த பேராசிரியரை யாழ்ப்பாணத்திற்கு அழைக்க யாழ் அரசாங்க அதிபரும், மாவட்ட அமைச்சின் செயலாளருமான திரு. யோகேந்திரா துரைசுவாமி ஏற்பாடு செய்திருந்தார். பேராசிரியருடன் வர்த்தக அமைச்சின் அந்தரங்கச செயலாளர் திரு. அபயக்கோனும் வந்திருந்தார்.

பேராசிரியர் சண்டிலான் இலங்கை வங்கியின்வடபிராந்திய முகாமையாளர் திரு. எம். ஜே. ஏ. ஜெயநாதன், யாழ்ப்பாணக் கல்லூரி அதிபர் திரு. ராஜன் கதிர்காமர், சீநோர் ஸ்தாபன சமூக சேவைப் பகுதி பணிப்பாளர் திரு. ஸ்ரனிஸ்லோஸ் ஆகியோரையும் சந்தித்து உரையாடினார். இவர்களின் சந்திப்பின்போது யாழ்.மாவட்ட அமைச்சின் பத்திரிகைத் தகவல் அதிகாரி திரு. இராஜேந்திராவும் கலந்துகொண்டார் (ஆ)

## நிரந்தரமாக்கப் பட்டனர்

(நெல்லியடி)

வடபிராந்திய போ.ச. டிப்போக்களில் பணிபுரியும் சமயாசமய ஒப்பந்த அடிப்படையிலான நிரந்தரமற்ற ஊழியர்கள் இம் மாதம்முதல் நியமன ஊழியர்களாக்கப் பட்டனர்.

இவர்களது நியமன உறுதிக்கான கடித சுற்று நிருபங்களை வட பிராந்திய போக்குவரத்துச் சபைத்தலைவர் திரு. டட்லி குணசேகரா ஊழியர்கட்கு அனுப்பி வைத்துள்ளார்,

சுமார் 60 பேருக்கு நிரந்தர நியமனம் வழங்கப்பட மாட்டாது ஊழியர்களின் நியமனங்களுக்கு வேலை வங்கியின் அனுமதியும் கோரப்பட்டிருந்தது எனவும் குணசேகரா தமது கடிதத்தில் தெரிவித்துள்ளார்- [கு]

## இலவசக் கல்வித் திட்டம் யாழ்.நகரில் நீடிக்குமா?

இலவசக் கல்வித் திட்டத்தினை முழுமையாக நிறைவேற்ற வேண்டுமெனில் இலவசமாக பாடப்புத்தகங்களையும் மாணவர்களுக்கு வழங்க வேண்டும் என்று இலவசக் கல்வித் திட்டம் அமுலுக்கு வந்தபோது அரசசபையில் உறுப்பினராக இருந்த இன்றைய ஜனதிபதி பிரேரணை ஒன்றினைக்கொண்டுவந்தாரா்.

1946-ம் ஆண்டு இலவசக் கல்வி உதயமாகிய போது பொறுப்பெடுத்தவர்கள் அரசசபையில் கல்வி அமைச்சராக இருந்த திரு. ஸி. டபிள்யூ டபிள்யூ கன்னங்கராவும், பிரதி கல்வி அமைச்சர் திரு. ஏ. ரத்நாயக்காவும் என்பதை நினைவு கூர்ந்தாலும் இலவசமாகப் பாடப் புத்தகங்களையும் வழங்க வேண்டும் என்று முப்பத்தைந்து வருடங்களுக்கு முன்னர்தாம் அரசசபையில் கொண்டுவந்த பிரேரணையை இன்று அமுல்படுத்தி இலவசக்கல்வித் திட்டத்தை முழுமைப்படுத்திய பெருமை இன்றைய ஜனதிபதியையே சாரும்.

மாணவர்களுக்கு வழங்கப்படும் இலவச பாடநூல்கள் ஒழுங்காக இதுவரை வழங்கப்படவில்லையானலும் இத்திட்டம் வரவேற்கத் தக்க ஒன்றே. ஆனல் இலவசக் கல்வித்திட்டம் இந்த நாட்டில் முழுமைப்படுத்தப்பட்டிருக்கும் இவ்வேளையில் மாணவர்கள் மத்தியில் தோன்றியுள்ள ரியூட்டரி மோகம் இலவசக் கல்வித் திட்டத்தையே அழித்துவிடும் நிலையைத் தோற்றுவித்துள்ளது.

பாடப் புத்தகங்கள் இல்லாமையால் ஏறத்தாள ஐம்பது வீதமான ஒன்பதுக்கும் பதினொன்றுக்கும் இடைப்பட்ட வயதினரான மாணவர்கள் தமது படிப்பை மேற்கொள்ள முடியாமல் பாடசாலைகளைவிட்டு வெளியேறுகின்றனர் என்று கல்வி அமைச்சு அண்மையில் மேற்கொண்ட கணக்கெடுப்பொன்றில் தெரியவந்துள்ளது. ஆனல் யாழ்ப்பாண மாவட்டத்திலுள்ள மாணவர்கள் 'ரியூட்டரி' களுக்குச் செலவு செய்யும் பணமே இவற்றைச் சரி செய்ய முடியாதா என்ற சந்தேகத்தையே எழுப்புகின்றது.

**எஸ். குகநாதன்**

காலையில் நித்திரை விட்டெழுந்ததும் ரியூஷனுக்குச் சென்று பின்னர் பாடசாலைக்குச் செல்லும் மாணவர்கள் அங்கிருந்து நேராக மீண்டும் ரியூசனுக்குச் சென்று இரவிலேயே வீடுதிரும்பும் ஒரு அவலநிலையை யாழ்ப்பாண மாவட்டத்திலேயே காணக்கூடியதாகவுள்ளது. தாம் கல்வி கற்கும் பாடசாலையில் கடமையாற்றும்ஆசிரியரிடமே பாடசாலையில் படித்த அதே பாடங்களைக் கற்க ரியூஷனுக்குச் செல்லும் மாணவர்களும் இல்லாமலில்லை. இதனல் மாணவர்கள் அந்த ஆசிரியரிடம் பாடசாலையில் கற்கும் வேலையில் அதிக கவனம் செலுத்தாமல் ரியூஷனில் படிப்பிக்கலாம் தானே என்றிருப்பதும் ஆசிரியர் ரியூஷனில் படிப்பிக்கலாம்தானே என்றிருப்பது தவிர்க்கமுடியாத தாகிவிடும். அதற்காக ஆசிரியர்கள் எல்லோரும் அப்படியே நடந்து கொள்வதென்றும் இல்லை; ஆனல் ஒரு சிலர் நடக்காமலும் இல்லை.

"எனக்கு ரியூஷனுக்குப் போக விருப்பமில்லைத்தான் ஆனல் விவசாயியின் மகள் ஒருத்தி ரியூஷனெடுக்க, நான் எடுக்காமலிருப்பதா என்று ஆசிரியையொருவரின் மகள் கருத்துத் தெரிவித்தார். நாகரிகம் என்றபேயர் வையில் அகப்பட்டுத்தவிக்கும் எம் சமுதாயத்தில் இப்படியும் சில சின்னத்தனங்கள். தனக்கு விருப்பமில்லாத நிலையிலும் தான் ரியூஷன் எடுக்காவிட்டால் சமுதாயத்தில் தறைத்து மதிக்கப்பட்டு விடுமேயென்றதப் பெண்ணம்நம்மாணவர்கள் மத்தியில் தோன்றியிருப்பதும் இதற்கொரு காரணமாகிறது. பாடசாலையைவிட்டு வெளியேறிய மாணவர்கள் ரியூஷன் எடுப்பதில் அவ்வளவு தவறு என்று கூறுவதற்கில்லை.

பாடசாலை நேரங்களில் மாத்திரம் 'ரியூட்டரி'களை நடாத்தினல் பாடசாலை மாணவர்களை தவிர்ந்த ஏனையவர்கள் மாத்திரம் அங்கு தமது கல்வியை மேற்கொள்ளலாம். இதனல் பாடசாலை ஆசிரியர்கள் அங்கு சென்று கல்விகற்பிப்பதை நிறுத்திக்கொள்ளவும் வேலையற்றிருக்கும் பல்லாயிரக்கணக்கான பட்டதாரிகளும் தற்காலிகமாக 'ரியூட்டரி'களிலாவது கடமையாற்றவும் வழிபிறக்கலாம். [அ]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாழ். ஆஸ்பத்திரி சம்பவம்

# மரணமானவரது காலிலும் தலையிலும் நால்வரும் மாறி மாறி வெட்டினர்!"

## சகநோயாளி சாட்சியம்

(யாழ்ப்பாணம்)

"ஆஸ்பத்திரி மதிலால் பாய்ந்து வந்த நான்கு சந்தேக நபர்களும் மரணமானவரை பயங்கர ஆயுதங்களால் கையிலும் காலிலும் தலையிலும் மாறிமாறி வெட்டினர் மரணமானவர் நிலத்தில் விழுந்த போது விடாது தொடர்ந்தும் வெட்டினர்."

யாழ். ஆஸ்பத்திரியில் நடைபெற்ற கத்திவெட்டுச் சம்பவத்தில் மரணமான மண்டைதீவைச்சேர்ந்த சண்முகலிங்கம் சிறீதரனின் (23 வயது) மரண விசாரணையின்போது ஆஸ்பத்திரிவார்ட்டில் இருந்துசிகிச்சை பெற்று வரும் நோயாளியான சதாசிவம் தவானந்தராசா சாட்சியமளிக்கையில் மேற் கண்டவாறு தெரிவித்தார்.

மேற்படி மரணவிசாரணை யாழ் ஆஸ்பத்திரியில் மரண விசாரணை அதிகாரியும் பதில் நீதிபதியுமான திரு. எஸ். எஸ். பிரான்சிஸ் முன்னிலையில் நடைபெற்றது.

திரு. தவானந்தராசா தொடர்ந்து சாட்சியமளிக்கையில் கூறியதாவது:-

நான் மண்டைதீவைச் சேர்ந்தவன், கடந்த மாதம் 22ம் திகதிமண்டை தீவைச் சேர்ந்த சீவரத்தினமும் மற்றும் சிலரும் என்னை வெட்டினுர்கள். எனக்குத் தலையிலும் கையிலும் காயம் ஏற்பட்டது. அதனுல் யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகிறேன்.

இம்மாதம் 15-ம் திகதி மண்டைதீவைச் சேர்ந்த சிறீதரனையும், யோகரத்தினத்தையும் சிலர் அல்லைப்பிட்டியில் வைத்து வெட்டியதனுல் அவர்கள் யாழ். ஆஸ்பத்திரியின் 15-ம் வாட்டில் அனுமதிக்கப் பட்டதாகக் கூறப்பட்டது.

சம்பவதினம்காலை 6 மணியளவில் நானும் யோகரத்தினமும் 15ம் வாட்டிற்கு முன் உள்ள தண்ணீர்க்குழாயடியில் நின்று முகம் கழுவினேம். அப்போதுசிறீதரன் அவ்விடத்தில் நின்று பல்லுத்தேய்த்துக் கொண்டிருந்தார். அப்போது நால்வர் வெளியில் நின்று ஆஸ்பத்திரி மதிலுக்கு பேலால் பாய்ந்து ஆஸ்பத்திரிக்குள் வந்தனர்.

### நால்வரும் சிறீதரனை வெட்டினுர்கள்

ஆஸ்பத்திரிக்குள் புகுந்த நாலு இளைஞர்களில் சிறீகாந்தன் என்பவர் தனது சட்டைக்குள் இருந்து கொடுவாக்கத்தி ஒன்றை வெளியே எடுத்து பல்லுமினுக்கிக் கொண்டு நின்ற சிறீதரனை வெட்டினுர். அதைத் தொடர்து ஏனைய மூவரும் தமது சட்டைக்குள் இருந்து ஆயுதங்களை வெளியே எடுத்து சிறீதரனை வெட்டினுர்கள். சிறீதரன சத்தமிட்டவண்ணம் நிலத்தில் வழுந்தார் விழுந்த வரை நால்வரும் தொடர்த்தும் பலமாக வெட்டினர். சத்தம் கேட்டு ஆஸ்பத்திரிக் காவலர்கள் ஓடிவந்தனர். அப்போது நால்வர்ல் மூவர் பின்டக்கமாக ஓடிவிட்டனர். குகவாதராசா மூல பக்கமாக ஓடினுர். காவலாளர்களும் கங்காணிமாரும் நாங்களும் சேர்ந்து குகவாதராசாவைத் துரத்திச் சென்றேம். அவர் வார்ட்டிற்குள் ஓடியபோது கதவைப் பூட்டிவிட்டு அவரை மேலும் ஓடவிடாது தடுத்துட்பிடித்தோம். அவர் வைத்திருந்த கத்தியையும் பறித்து எடுத்து, அவரையும் கத்தியையும் ஆஸ்பத்திரிப் பொலிசாரிடம் ஒப்படைத்தோம், மரணவிசாரணை அதிகாரி பிரேத பரிசோதனைக்கு உத்தரவிட்டு மரணவிசாரணையை ஒத்தி வைத்தார்.

சந்தேக நபரான குகவரதராசாவை(22வயது)இம்மாதம் 28-ம் திகதி வரை றிமாண்டில் வைக்கும்படி பதில் நீதிபதி உத்தரவிட்டார்.

சந்தேக நபர்களான செ. சிறீகாந்தன் (20 வயது), ந. கைலாசவாசன் (21வயது), ப. சிவபாலன் (20 வயது) ஆகியோரைக் கைதுசெய்து நீதிமன்றத்தில் ஆஜர் செய்யும்படி பதில் நீதிபதி பொலிசாருக்கு உத்தரவிட்டுள்ளார்.

யாழ். பொலிஸ் இன்ஸ்பெக்டர் திரு. எஸ். எஸ். திருச்சிற்றம்பலம் சாட்சிகளை ஆஜர் செய்தார்.

சந்தேக நபர்கள் ஏற்கனவே கத்திவெட்டு சம்பந்தமாக றிமாண்டில் வைக்கப்பட்டு இம்மாதம் 10ம் திகதியே பிணையில் சென்றவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது. (சோ-இ)

---

வருடாந்த இல்ல

## மெய்வல்லுநர் போட்டிகள்

(அச்சுவேலி)

புத்தூர் ஆவரங்கால் நடராஜ இராமலிங்க வித்தியாலய வருடாந்த இல்ல மெய் வல்லுநர் போட்டி அண்மையில் நடைபெற்றபோது, வள்ளுவன், கம்பன், இளங்கோ இல்லங்கள் முறையே 1ம், 2ம், 3-ம் இடங்களைப்பெற்றன.

(காப்பாய் வட்டாரக் கல்வி அதிகாரி திரு. ஆ. வ. தங்கராசா கொடியேற்றி விளையாட்டுப் போட்டியை ஆரம்பித்து வைத்தார்.

வித்திபாலய அதிபர் திரு. சி. சிவானந்தம் தலைமையில் நடைபெற்ற பரிசளிப்பு விழாவில் யாழ். கல்வித்திணைக்கள கல்வி அதிகாரி திரு. க. நவரத்தினம் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு, மங்கல விளக்கேற்றி உரையாற்றினுர்.

ஆவரங்கால் சிவன்கோவில் முன்றலில் உள்ள மைதானத்தில் இவ்விளையாட்டுப்போட்டிகள் நடைபெற்றன. வெற்றி பெற்றவர்களுக்கான பரிசில்களை, திரு. நவரத்தினம் வழங்கினுர்.

......

## "தமிழ்க் கலைஞர்கள் ஆங்கிலத்தில் பேசுகிறுர்களே"

### டாக்டர் நந்தி கவலை

(யாழ்ப்பாணம்)

"இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்ட தொன்மை மிக்க தமிழ்மொழியை மறந்து தமிழ்க்கலைஞர்கள், கல்விமான்கள், அறிஞர்கள் மற்றும் சட்டத்தரணிகள் 70 வீதத்தில் ஆங்கிலத்தில் பேசிவருவது வருந்தத்தக்கது."

இலங்கை தமிழ்க் கல்வி, கலை, பண்பாண்டுக் காப்புக் கழகப் பத்தாவதாண்டின்சிறப்புப்பொதுக்கூட்டம் நடைபெற்றபோது மருத்துவக் கலாநிதி செ. சிவஞானசுந்தரம் (நந்தி) பேசுகையில் மேற் கண்டவாறு குறிப்பிட்டார்.

யாழ்ப்பாணம் மகாத்மா காந்தி வீதியிலுள்ள விம்ஸ் நிலையத்தில் மேற்படி கழகத் துணைத்தலைவர்களில் ஒருவரும் யாழ். மாநகர சபை உறுப்பினருமான திரு. ஆ. துரைராசசிங்கம் தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில் திரு. சிவஞானசுந்தரம் தொடர்ந்து பேசுகையில், இக்கழகத்தின் வளர்ச்சிக்காக, உலகநாடுகளுக்குச் செல்லும்பொழுது வேண்டிய பணிகளைச் செய்வேன் என்று சொன்னுர்.

கழகத்தின் பொதுச் செயலாளரும் ஓய்வுநபாகிய திரு. பனடிக்ற் பேசும்போது, "பிறப்பதற்கு வீடு எதுவும் கொடுக்கப்படாத, மாட்டுக் கொட்டிலில் பிறந்த குழந்தை ஒன்று உலகப்புகழ்பெற்றது போன்று, இக்கழகமும் அப்படிப்பட்ட ஒரு நல்ல நிலையை விரைவில் அடையும் என்று குறிப்பிட்டார்.

'இலங்கைத் தமிழ்க்கல்வி, கலை பண்பாட்டுக்காப்புக் கழகம்' என்றபெயரை 'உலகத் தமிழ்க்கல்வி, கலை பண்பாட்டுக்கழகம்' எனப்பெயர்மாற்ற வேண்டும் என்றும் கழகச்செயலகக் கட்டடம் நிறுவப்படும் இடத்திற்கு 'கலைக்கோட்டம்' எனப் பெயரிடப்படவேண்டும் என்றும் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

துணைப்பொருளாளர் திரு. ஞானபாஸ்கரனுல் கழகச் சட்டவிதிகள் கொண்டுவரப்பட்டு நிறைவேற்றப்பட்டன.

மற்றும் யாழ். மாநகரசபை உறுப்பினர் திருமதி அந்தோனியா சுவாமிநாதர் உட்படப் பலர் கழகத்தினைப் பாராட்டிப்பேசினர். (ச)

---

## 50,000 ரூபா பொருட்களை இந்தியா கடத்த முயற்சி!

[மன்னுர்]

இந்தியாவிலிருந்து இலங்கை வந்த சுற்றுலா கோஷ்டி ஒன்று இந்தியாவுக்குத் திரும்பும் போது 50 ஆயிரம் ரூபா பெறுமதியான கசெட் ரேடியோக்களைக் கடத்தும் முயற்சியிலீடுபட்டது.

தலைமன்னுர் வழியாக லக்கேஜ் மூலம் இக்கடத்தல் முயற்சி நடைபெற்றது. தகவல் ஒன்றையடுத்து கொழும்பிலிருந்து வந்த 3 சுங்க அதிகாரிகள் இக்கடத்தல் முயற்சியைக் கண்டுபிடித்தனர்.

இதுசம்பந்தமாக கொழும்பிலிருந்து வந்த 3 சுங்க அதிகாரிகளும், தலைமன்னுர் சுங்க அதிகாரிகளும் விசாரணை நடத்திவருகின்றனர்.

---

## "உடுவில் முருகமூர்த்தி வி. மகாவித்தியாலயமாகும்"

### வட்டாரக்கல்வியதிகாரி தனஞ்சயன் தகவல்

(யாழ்ப்பாணம்)

'உடுவில் முருகமூர்த்தி வித்தியாசாலை கூடிய விரைவில் மகாவித்தியாலயமாகத் தரம் உயர்த்தப்படும் என்று மானிப்பாய் வட்டாரக் கல்வி அதிகாரி திரு. எஸ். தனஞ்சயன் கூறினுர்.

பாடசாலை விஞ்ஞான, கணித மாணவர்களின் பொருட்காட்சியைத் திறந்து வைத்துப் பேசுகையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினுர்.

பாடசாலை அதிபர் திரு. எஸ். அரசரத்தினம் மங்கள விளக்கேற்ற பாடசாலையின் முன்னைநாள் அதிபர் திரு. வி. கந்தையா கலை, கைப்பணிப் பொருட்காட்சியையும், வடபிராந்திய மனையியல் வட்டாரக் கல்வி அதிகாரி திருமதி. உருக்குமணி சுந்தரராஜன் மனையியல் பொருட்காட்சியையும் திறந்து வைத்தனர்.

திரு. தனஞ்சயன் தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது

"பாடசாலையின் தரம் உயர வேண்டுமானுல் பாடசாலை அதிபர், ஆசிரியர்கள் மட்டும் திறமையாகச் செயல்பட்டால் போதாது. பாடசாலையைச் சுற்றியுள்ளவர்களும் பெற்றேர்களும் மாணவர்களும் கூட பாடசாலையின் முன்னேற்றத்தில் அக்கறை காட்ட வேண்டும்.

"இப்பாடசாலை கல்வியுடன், சமயப்பணியிலும் கூடுதல் ஈடுபாடு கொண்டிருப்பதையும் காணக்கூடியதாக இருக்கிறது.

"பாடசாலைகளை அரசாங்கம் எடுத்து விட்டது; நாம் ஏன் அதற்கு உதவி செய்ய வேண்டுமெனச் சில பெற்றேர்கள் நினைக்கிறுர்கள். அதனுல் அவர்களின் பாடசாலையின் தரம் குறைவதுடன் பிள்ளைகளின் கல்வியும் பாதிக்கப்படுகிறது.

மாணவர்கள் தாம் பெற்ற அறிவை வெளிக் கொணரவே பொருட்காட்சிகள் நடாத்தப் படுகின்றன. இப்படிப்பொருட்காட்சிகளை நடாத்துவதன் மூலமும், அதைப்பலர் பார்வையிடுவதன் மூலமும் மாணவர்களுக்கு மகிழ்ச்சி ஏற்படுவதுடன், தமது கல்வியை மேலும் வளர்ப்பதற்கு ஊக்குவிப்பதாகவும் அமையும்.

பாடசாலை அதிபர் திரு. எஸ். அரசரத்தினம் பேசுகையில் 'கிராமங்கள் பட்டினமாகிவிட்டால் மட்டும் போதாது. கிராமப்புறப் பாடசாலைகள் கல்வியிலும், விளையாட்டிலும் முன்னேற வேண்டும்". அப்போது தான் கிராமப்புற மக்கள் கல்வி கற்பதற்கு பட்டினங்களில் உள்ள கல்லூரிகளை நாடிச் செல்லமாட்டார்கள் என்ருர்.

---

## உதைபந்தாட்டக் கழகம்

(நீர்வேலி)

இருபாலை கிழக்கில் பாரதி கலாமன்றத்தின் ஆதரவில உதைபந்தாட்டக்கழகம் ஒன்று ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இக் கழகத்திற்கான உதைபந்தாட்டதிடலை இக்கழகத்தினர் சிரமதான அடிப்படையில் துப்புரவாக்கியுள்ளனர்.

---

## 2 - 1 கோலால் வெற்றி

[யாழ்ப்பாணம்]

நாவாந்துறை சென். நீக்கிலஸ் இ. வி கழகம் 'பி'பிரிவு சுவப்புப, சென். மேரிஸ் விளையாட்டுக்கழகமும் மோதிய ஓர் உதைபந்தாட்டப்போட்டியில் சென். நீக்கிலஸ் இ. வி கழகம் 2-1 கோல்களால் வெற்றிபெற்றது. [அ]

---

## உரும்பராய் வி. க. வெற்றி

(யாழ்ப்பாணம்)

கோப்பாய் உதவி அரசாங்க அதிபர் பிரிவு நடாத்தும் உதைபந்தாட்ட நொக்கவுட் சுற்றுப் போட்டியில் உரும்பராய் விளையாட்டுக்கழகம் வெற்றி பெற்றுள்ளது.

புத்தூர் புதிய பறவை விளையாட்டுக்கழகத்தை எதிர்த்து மோதவிருந்த போதிலும் அக்கோஷ்டி சமூகம் கொடுக்காததால் உரும்பராய் விளையாட்டுக்கழகத்திற்கு வெற்றி எனத் தீர்மானிக்கப்பட்டது.

---

## 'பிக்பொக்கட்' வழக்கில் எதிரிக்கு 3 மாதக் கடூழியம்

[யாழ்ப்பாணம்]

யாழ்ப்பாணம் பஸ்நிலையத்தில் 'பிக்பொக்கட்' அடித்ததாக குற்றம் சாட்டித் தொடரப்பட்ட வழக்கில் எதிரிக்கு 3 மாதக் கடூழிய சிறைத்தண்டனை விதிக்கப் பட்டது.

இவ்வழக்கு யாழ் நீதிமன்றத்தில் நீதவான் திரு ரி. யோகநாதன் முன்னிலையில் விசாரணை செய்யப்பட்டது.

இவ்வழக்கில் இம்மாதம் 10-ம் தேதி யாழ் பஸ்நிலையத்தில், கந்தையா கோபாலன் என்பவர் பிரயாணி ஒருவரிடம் 'பிக்பொக்கட்' அடித்ததாகக் குற்றம் சாட்டப்பட்டிருந்தது.

எதிரி குற்றத்தை ஒப்புக் கொண்டார் ஏற்கனவே கொழும்பு கோட்டை நீதிமன்றத்தில்களவாடியபொருட்களை வைத்திருந்த குற்றத்திற்காக எதிரிக்கு 5 வருடம் ஒத்திவைக்கப்பட்ட 1 வருட சிறைத்தண்டனை விதிக்கப் பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

யாழ் பொலிஸ் உத்தியோகத்தர் திரு. கே. குணரத்தினம் வழக்கைத் தாக்கல்செய்திருந்தார். எதிரிக்கு 3 மாதக் கடூழியச் சிறைத் தண்டனை விதிக்கப்பட்டது. (அ)

---

## உதைபந்தாட்டம்

(புலோலி)

பருத்தித்துறை புலோலி தெங்கு பனம் பொருள் உற்பத்திவிற்பனவுக் கூட்டுறவுச் சங்க உதைபந்தாட்டக் கோஷ்டிக்கும் தெல்லிப்பழை தெங்கு பனம்பொருள் உற்பத்தி விற்பனவுக் கூட்டுறவுச் சங்க உதைபந்தாட்டக் கோஷ்டிக்குமிடையே நடைபெற்ற உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியில் 1—2 கோல்களால் தெல்லிப்பளை தெங்கு பனம் பொருள் உற்பத்திவிற்பனவுக் கூட்டுறவுச் சங்க உதைபந்தாட்டக் கோஷ்டி வெற்றிபெற்றது.

வதிரி பொபேஸ் விளையாட்டுக்கழக மைதானத்தில் நடைபெற்ற இவ் வுதைபந்தாட்டச் சுற்றுப்போட்டிக்கு திரு சிவதயாபாரன் மத்தியஸ்தராகக் கடமையாற்றினுர்.

......

## ஓய்வு பெறும் அதிபருக்குப்பாராட்டு

(ஊர்காவற்றுறை)

கரம்பன் சண்முகநாத மகாவித்தியாலயத்தில் கடந்த ஆறு வருடங்களாக அதிபராகக் கடமையாற்றிய திரு. தி. நடராசா ஓய்வு பெற்றதையொட்டி கருவில் மக்கள் நடாத்தும் பாராட்டு விழா இம் மாதம் 23ம் திகதி நடைபெறவுள்ளது.

ஊர்காவற்றுறை எம். பி. கா. பொ. இரத்தினம் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்வார். (கு)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சகல இன மக்களினதும் ஐக்கியமே பொருளாதாரத்தை கட்டி எழுப்பும்

## பளையில் யாழ். மாவட்ட அமைச்சர்

(பளை)

சகல இன மத மக்களினதும் ஐக்கியமே நாட்டின் பொருளாதாரத்தை கட்டி எழுப்ப ஏதுவாக அமையும். அத்துடன் அரசாங்க ஊழியர்களும் தமது பொறுப்புணர்ச்சியை உணர்ந்து பொதுமக்களுடன் ஒத்துழைத்துசெயற்படல்வேண்டும்.

யாழ். மாவட்ட அமைச்சர் திரு. யு. பி. விஜக்கோன். பச்சிலைப்பள்ளி (பளை) உதவி அரசாங்க அதிபர் காரியாலயத்தில் நடைபெற்ற பிரதேச அபிவிருத்தி பற்றிய கூட்டத்தில் தலைமைஉரையாற்றும்போது மேற்கண்டவாறு கூறினார்.

பச்சிலைப்பள்ளி உதவி அரசாங்க அதிபர் பிரிவு அரசாங்க அதிகாரிகள் ஊழியர்கள் யாழ் மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர்கள் திரு. என். பி. ஜெகநாதன், திரு. எம். பஞ்சலிங்கம் ஆகியோர் இக்கூட்டத்தில் பங்குபற்றினர்.

மாவட்ட அமைச்சர் மேலும் உரையாற்றுகையில் குறிப்பிட்டதாவது:

பொதுமக்களின் தேவைகளையும் அபிலாசைகளையும் தீர்ப்பதே அரசாங்கத்தின் முக்கிய கொள்கை. எனவே அரசாங்க காரியாலயங்களுக்கு தமது தேவைகளை நிறைவேற்ற வரும் பொதுமக்களை இன்முகங்கொண்டு வரவேற்று அவர்களின் காலத்தை விரயம்செய்யாது உடனுக்குடன் தீர்த்து வைத்து அவர்களின் ஒத்துழைப்பையும் பெறல்வேண்டும் அப்போதுதான் நாம் மேற்கொள்ளும் அபிவிருத்தித்திட்டங்கள் தங்கு தடையின்றி நிறைவுபெற்று நாடும் பொருளாதார அபிவிருத்தி அடையும்.

இப்பகுதி விவசாயம், கடற்றொழில், தென்னைச்செய்கை போன்றவற்றை முக்கிய தொழிலாகக்கொண்டது. இவைகளுக்கான மானியஉதவிகளையும் மற்றும் தேவைகளையும் எச்சந்தர்ப்பத்திலும் அரசு செய்டவுள்ளது.

சகல உதவிகளும் நாட்டின் சகல மாவட்டங்களுக்கும் இன மத பாகுபாடற்றவகையில் பகிர்ந்தளிக்கப்படும். இதனை இப்பகுதி மக்கள் நன்குபயன்பெற அரச ஊழியர்கள் மக்களுடன் ஒன்றுபட்டு உழைத்தல் அவசியம்.

### தையல்மெஷின்களை கையளித்தார்

அரசாங்க உதவிப் பணம் பெற்றுவந்த விதவைகளான முகாவிலைச் சேர்ந்த இ சரஸ்வதி, மருகங்கேணியைச்சேர்ந்த மு. தங்கநாயகி ஆகியோரின் புனரமைப்புத் திட்டத்தின்கீழ் சமூக சேவைப் பகுதியினரால் கொடுக்கப்பட்ட இரு தையல் மெஷின்களை அமைச்சர் கையளித்தார்

அடுத்து பளை தென்னை உற்பத்திச் சபைக்கு விஜயம்செய்த திரு. விஜயக்கோனை காரியாலய பொறுப்பதிகாரி திரு. எஸ். சண்முகநாதன் வரவேற்று அழைத்துச் சென்றார்.

காரியாலய கட்டிடம் ஆட்டுப்பண்ணை ஆகியவற்றை பார்வையிட்டபின் மாவட்ட அமைச்சர் உரையாற்றுகையில் குறிப்பிட்டதாவது:

அரசாங்கம் தென்னைச் செய்கைக்கு பலதரப்பட்ட மானிய உதவிகளை வழங்கிவருகிறது இதுபற்றி இப்பகுதி மக்களுக்கு அதிகம் தெரியாது போலும் எனவே கருத்தரங்கு போன்றவற்றை ஆங்காங்கே வைத்து மக்களுக்கு இதுபற்றி விளக்கம் அளிக்கவேண்டும் என்றார். (சங். நிரு. இ)

---

## வயாவிளானில் பாவனையாளர் சங்கம்

(மாவிட்டபுரம்)

வயாவிளான்பகுதிப்பாவனையாளர்களைப் பாதுகாக்கும் நோக்குடன் வயாவிளான் கிழக்கில் பாவனையாளர்சங்கம் ஒன்று அங்குரார்ப்பனம்செய்து வைக்கப்பட்டுள்ளது.

கிராமசேவை அலுவலர் திரு. க. க. வேலாயுதபிள்ளையின் முயற்சியால் வயாவிளான் ஸ்ரீ. க. த. க. பாடசாலை மண்டபத்தில் ஒழுங்குசெய்யப்பட்ட இக்கூட்டத்திற்கு விலைக்கட்டுப்பாட்டு அதிகாரி திரு. செ. நவரத்தினம் தலைமை தாங்கினார்.

நிர்வாகிகளாகப் பின்வருவோர் தெரிவாகினர்.

தலைவர்: திரு. செ. மரியநாயகம், உபதலைவர்: திரு பொ. மார்க்கண்டு, காரியதரிசி: திரு. அ. வி. சாமிநாதன், உபகாரியதரிசி: திரு. சிதம்பரம், பொருளாளர்: திரு. அ. நேசையா, நிர்வாக சபை: திரு. கு. எட்வேட்ராஜா, திரு. செ. அந்தோனிப்பிள்ளை, திரு. மி. அ. ஜேசுதாசன்.

இச்சங்கத்திற்கு வயாவிளான் கிழக்கு பாவனையாளர் சங்கம் எனப் பெயரிடுவதெனவும் தீர்மானிக்கப்பட்டது. (அ)

---

## புனரமைப்பு ஆலோசனைக் கூட்டம்

(யாழ்ப்பாணம்)

யாழ் மாவட்ட சன சமூக நிலையங்களின் சமாசத்தின் புனரமைப்பு ஆலோசனைக் கூட்டம் யாழ். உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகத்தில் (யாழ். தேசிய வீடமைப்புச் செயலகம்) இம்மாதம் 20-ம் திகதி காலை 9-30 மணிக்கு நடைபெறவிருப்பதாக சனசமூக நிலைய உத்தியோகத்தர் திரு. வ. கிருஷ்ணசாமி தெரிவித்துள்ளார்.

உள்ளூராட்சி உதவி ஆணையாளர் திரு. அன்ரன் அல்பிரட்டின் பணிப்பின் பேரிலேயே இக்கூட்டம் நடைபெறுவதாகவும் அவர் கூறினார்.

சமாசத்தலைவர் முகாந்திரம் ஈ. பீ. இராசையா, சமாச நிர்வாகசபை உறுப்பினரும், சமாச வலி-மேற்குக்கிளை உதவிச் செயலாளருமான திரு சி. வரதராசா ஆகியோரின் முயற்சியை அடுத்து இக்கூட்டம் நடைபெறுகிறது.

வடபகுதியின் சகல உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளிலும் உள்ள சமாசக்கிளைகளிலிருந்து ஒரு பிரதி நிதிகளை இக்கூட்டத்தில் சமுகமளிக்குமாறு கேட்கப்பட்டுள்ளது. (இ)

......

## வான் தடம்புரண்டது

(மன்னார்)

தலைமன்னாரிலிருந்து சில பிரயாணிகளுடன் மன்னார் நோக்கி வந்த நீர்கொழும்பைச் சேர்ந்த வான் ஒன்று ஓலைத்தொடுவாய் சந்திக்கருகில் தடம்புரண்டது.

வானில் பிரயாணஞ்செய்த ஐவர் காயமடைந்தனர். காயமடைந்தவர்கள் மன்னார் ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இது சம்பந்தமாக மன் [illegible]

[illegible] (கு)

---

## 63-வது வருடாந்த மோதல்

# சென்.பற்றிக்ஸ் கல்லூரிக்கு இன்னிங்ஸ் வெற்றி

(யாழ்ப்பாணம்)

யாழ். சென்பற்றிக்ஸ் கல்லூரிக்கும் வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக்கல்லூரிக்குமிடையே நடைபெற்ற 63-வது வருடாந்த மோதலில் பற்றிக்ஸ் கல்லூரி இன்னிங்ஸாலும் 77 ஓட்டங்களாலும் வெற்றிபெற்றது

முதலில் துடுப்படுத்தாடிய பற்றிக்ஸ் கல்லூரி முதல் இன்னிங்ஸில் 14 ஓட்டங்களைப் பெற்றது.

அடுத்து ஆடிய யாழ்ப்பாணக் கல்லூரி சகல விக்கட்டுகளையும் இழந்து 81 ஓட்டங்களை மட்டுமே எடுத்ததனால் மீண்டும் 2-ம் இன்னிங்ஸில் துடுப்பாட அனுமதிக்கப்பட்டது.

2-வது இன்னிங்ஸிலும் யாழ்ப்பாணக்கல்லூரி 90 ஓட்டங்களை மட்டுமே பெற்றது.

இவ்வருடாந்தப் போட்டியில் சகல துறைகளிலும் சிறந்த வீரருக்குரிய பரிசை பற்றிக்ஸ் கல்லூரியைச்சேர்ந்த எஸ். சகாயராஜா பெற்றுக்கொண்டார்.

சிறந்த துடுப்படி வீரர் எம். ஜே. மலைமான், சிறந்த பந்துவீச்சாளர் சுரேஷ் அல்பிரட் இவர்களும் பற்றிக்ஸ் கல்லூரியைச் சேர்ந்தவர்கள்.

சிறந்த பந்து தடுப்பு வீரருக்கான பரிசு யாழ்ப்பாணக் கல்லூரியைச் சேர்ந்த பி. ஆனந்தகுமாரக்கு கிடைத்தது.

கடந்த ஆண்டு நடைபெற்ற 62 வது வருடாந்தப் போட்டி வெற்றி தோல்வியின்றி முடிவடைந்தது தெரிந்ததே. (இ)

---

## உடுவில் கொலை வழக்கு: மேல்விசாரணை 25-ம் திகதி

(மாவிட்டபுரம்)

உடுவில் கொலை வழக்கு சந்தேக நபர்கள் தொடர்ந்து றிமாண்டில் வைக்கப்பட்டு வழக்கு விசாரணை இம்மாதம் 25ம் திகதிக்கு ஒத்திப்போடப்பட்டது

உடுவிலைச் சேர்ந்த இராமலிங்கம் சின்னத்தம்பி என்பவரைக் கத்தியால் வெட்டியும், பொல்லால் அடித்தும் கொலை செய்ததாக பெருமாள் அமரசிங்கம், பெருமாள் குருகுலசிங்கம், நேசன் பரமு அல்லது சற்குணம், சொக்கன் மாடசாமி ஆகிய நால்வர் சந்தேகத்தின்பேரில் கைது செய்யப்பட்டு றிமாண்டில் வைக்கப்பட்டிருந்தனர்.

இந்நபர்கள் மல்லாகம் நீதிமன்றத்தில் மீண்டும் ஆஜர் செய்யப்பட்ட சமயம் தொடர்ந்து றிமாண்டில் வைக்குமாறு உத்தரவிட்ட நீதிபதி திரு. எஸ். இராஜசிங்கம் வழக்கு விசாரணையை 25ம் திகதிக்கு ஒத்திவைத்தார். (அ)

---

## மன்னார்ச் செய்திகள்

### அபராதம்

சட்ட விரோதமாக ஆமை இறைச்சி வைத்திருந்ததாக குற்றம்சாட்டி மன்னார்வாசி ஒருவர் மீது மன்னார் பொலிசார் மன்னார் நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்துள்ளனர்.

குற்றவாளி தனது குற்றத்தை ஒப்புக்கொண்டதை யடுத்து மன்னார் நீதவான் திரு. மடவெல 100 ரூபா அபராதம் அல்லது ஒரு மாத சிறைத் தண்டனைவிதித்தார்.

### வியாபாரிகள் விசாரணை

மன்னார் ஞாயிறு சந்தையில் அளவு குறைந்த தராசுபடிகளை வைத்து வியாபாரம் செய்த பல வியாபாரிகள் மன்னார் பொலிசாரினால் அழைத்துச் செல்லப்பட்டு விசாரணை செய்யப் பட்டனர். (கு)

### சாராயத்துடன் சென்ற பெண் கைது

மன்னாரிலிருந்து தலைமன்னாருக்கு எட்டுப் போத்தல சாராயத்தை பஸ்ஸில் எடுத்துச் சென்ற தலைமன்னார் கிராமத்தைச் சேர்ந்த பெண்மணி ஒருவர் தலைமன்னார் பொலிசாரினால் கைது செய்யப் பட்டார்.

விசாரணை தொடர்ந்துநடைபெறுகிறது.

### சந்தேகநபர் சரண்!

அண்மையில் வவனிக்குளம் மூன்று முடிச்சுக் காட்டில் துப்பாக்கியால் சுடப்பட்டு மரணமான சின்னத்தம்பி அருணாசலத்தின் மரணம் சம்பந்தமாக சந்தேக நபர் ஒருவர் மன்னார் பொலிசில் சரணடைந்துள்ளார்.

உடம்பில் துப்பாக்கிக் குண்டுகள் துளைத்த நிலையில் சடலமாக கண்டுபிடிக்கப்பட்ட சின்னத்தம்பி அருணாசலத்தின் மரணம் சம்பந்தமாக ஸ்தலத்திற்குச் சென்ற பொலிஸ் சார்ஜன்ட் திரு. டேவிட் பொலிஸ் கான்ஸ்டபிள் திரு.சில்வா விசாரணை நடத்தி லைசென்ஸ் இல்லாத துப்பாக்கி ஒன்றையும் கைப்பற்றினர்.

இது சம்பந்தமாக மன்னார் பொலிசில் சரணடைந்த சந்தேக நபரை அடுத்த தவணை வரை விளக்க மறியலில் வைக்குமாறு மன்னார் நீதவான் திரு மடவெல உத்தரவிட்டார்

### பனைவளம் குன்றுகிறது

மன்னாரிலிருந்து தலைமன்னார் வரையில் பனை மரங்கள் களவாக வெட்டப்பட்டு வெளியூருக்கு அனுப்பப்படுவதால் மன்னார் மாவட்டத்தில் பனை வளம் குறைந்து வருகிறது.

பனை மரங்கள் வெட்டுவதை சட்ட பூர்வமாக தடைசெய்ய வேண்டும் என கிராமிய கைத்தொழில் அமைச்சர் திரு எஸ். தொண்டமானுக்கும், பனம்பொருள் அபிவிருத்திச்சபைத் தலைவருக்கும் மகஜர் ஒன்று அனுப்பப் பட்டுள்ளது.

பனந்தோட்ட சொந்தக்காரருக்கு நல்ல வருமானம் கிடைத்து வருவதாகவும் மன்னாரிலிருந்து தலைமன்னார் வரை ஆயிரக்கணக்கான பனை மரங்களே உள்ளன என்றும் களவாகப் பனை மரங்கள் வெட்டப்படுவதால் பனந்தோட்ட சொந்தக்காரர்கள் அதிக கவலை அடைந்துள்ளார்கள். இதனால் பனை மரம் வெட்டுவதை சட்ட பூர்வமாக தடை செய்ய வேண்டும் என்று மேலும் அந்த மகஜரில் குறிப்பிடப் பட்டுள்ளது (கு)

---

## கச்சதீவுக்கு

# கைக்கடிகாரம் கடத்தினராம்: விசாரணை நடக்கிறது

[யாழ்ப்பாணம்]

கச்சதீவில் கைக்கடிகாரங்கள், மற்றும் பொருட்களுடன் கைது செய்யப்பட்டவர் தொடர்பான விசாரணை சுங்க இலாகாவில் நடைபெற்று வருகிறது.

குறிகாட்டுவான் இறங்குதுறையிலிருந்து சுங்கப்பகுதியினரின் பரிசோதனைக்கு உட்படாமல், 10 கைக்கடிகாரங்கள், 70 டோர்ச் லைட்டுகள். பார்சோப் தேங்காய்எண்ணெய், ஷாம்பு ஆகியவற்றுடன் ஒருவர் கச்சதீவுக்குப் புறப்பட்டிருந்தார்.

குறிகாட்டுவான் இறங்குதுறை சுங்கப்பிரிவில் கடமையாற்றிய சுங்கப்பகுதி உத்தியோகத்தர் திரு. பொன்னையா இதனையறிந்து, உடனடியாகக் கச்சதீவு சுங்க இலாகாவுடன் தொடர்பு கொண்டு அறிவித்தார்.

கச்சதீவில் சுங்கப்பகுதி உத்தியோகத்தர் திரு. பவளராசா, மேற்படி பொருட்களுடன் அவரைக் கைதுசெய்து, யாழ். சுங்க இலாகாவிடம் ஒப்படைத்து, தற்போது விசாரணை நடைபெற்று வருகிறது. [க-அ]

---

## நிர்வாகிகள்

(யாழ்ப்பாணம்)

உலகத் தமிழ்க் கல்வி, கலை, பண்பாட்டுக்கழகத்தின் 10வது ஆண்டின் புதிய ஆட்சிக்குழு உறுப்பினர்களாகப் பின்வருவோர் தெரிவுசெய்யப்பட்டுள்ளனர்:

தலைவர்: மருத்துவ கலாநிதி திரு. செ. சிவஞானசுந்தரம் (நந்தி), துணைத் தலைவர்கள்: திருவாளர்கள் த. சண்முகலிங்கம், மு. பராஜசிங்கம், பொதுச் செயலாளர்: ஓவியர் ச.பெனடிக்ற், செயலாளர்: திரு. க. விமலேந்திரன், பொருளாளர்: திரு. பி, சி. அன்ரனி, துணைப் பொருளாளர்: திரு. க. ஞானபாஸ்கரன், கல்வி: திருவாளர்கள்: சி. சிவபாலசிங்கம், வண்ணைச் சே சிவராசா, பி. நடராசன், கலை: திருவாளர்கள்: இரா. நடராசன், இராம் குமாரசாமி, த. குணசேகரம் பண்பாடு: திருவாளர்கள்; மு. செல்வராசா. பீ. பீ. சேவியர், க. கமலச்சந்திரன், பொருள்: திருவாளர்கள்: சு. ஜெயகாந்தன், க. கனகலிங்கம், ம. கி. சீவரெத்தினம். (ச)

---

## கடற்றொழில் பயிற்சிக்கப்பல்

[கொழும்பு]

2 கோடியே 50 லட்சம்ரூபா பெறுமதியான கடற்றொழில் பயிற்சிக்கப்பல் ஒன்றை ஜப்பான் இலங்கைக்கு வழங்கியுள்ளது.

இதற்கான ஒப்பந்தம் ஒன்று டோக்கியோவில் கைச்சாத்தானது.

உதவித் திட்டத்தின் பின் ஜப்பான் வழங்கியுள்ள இக்கப்பல் மூலம் இலங்கையில் ஆழ் கடலில் மீன் பிடிப்பவர்கட்கு பயிற்சி அளிக்கப்படும் (இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உணவுப் பொருட்களிலிருந்து எரிபொருள் உற்பத்தி உலகமக்கள் பட்டினியை எதிர்நோக்குகிறார்கள்

## ஆராய்ச்சி நிறுவனம் எச்சரிக்கை

வண்டன், மார்ச். 16

எரிபொருள் நெருக்கடியை அடுத்து உணவு தானியங்களிலிருந்து எரிபொருள் தயாரிப்பது அதிகரித்துவருவதால் உலகின் கோடிக்கணக்கான மக்கள் பட்டினியை எதிர்நோக்கி இருக்கிறார்களெனஎச்சரிக்கைவிடுக்கப்பட்டுள்ளது.

'வேர்ல்ட் வாச்' என்ற ஆராய்ச்சி நிறுவனமே இந்த எச்சரிக்கையை விடுத்துள்ளது.

எரிபொருள் நெருக்கடி மோசமாகிவருவதையடுத்து உலகின் பலநாடுகள் உணவு தானியங்கள், கரும்பு ஆகியவற்றிலிருந்து எரிபொருளைத் தயாரித்து வருகின்றன.

பிரேஸில் நாடே இப்போதுஉணவுப்பொருட்களிலிருந்து எரிபொருள் தயாரிப்பதில் முன்னணி வகிக்கிறது. பிரேஸிலின் எரிபொருள் தேவையில் 14 வீதம் உணவுப்பொருட்களிலிருந்தே பெறப்படுகிறது என்பது குறிப்பிடத்தக்கது.

உலக நாடுகளில் 31கோடி 50 லட்சம் மோட்டார்வாகனங்கள் உள்ளன என்பதும் குறிப்பிடத்தக்கது. (இ)

# திமுக-இ. காங். கூட்டணியின் தமிழக முதல்வர் யார்?

## இன்னும் முடிவாகவில்லை என்கிறார் துணை அமைச்சர் சாமிநாதன்

சென்னை, மார்ச். 15

இந்திரா காங்கிரஸ்—தி.மு.க. கூட்டணி தமிழ் நாட்டில் ஆட்சிக்கு வரும் பட்சத்தில், யார் தமிழக முதல் அமைச்சர் என்பதுபற்றி இன்னும் முடிவு செய்யப்படவில்லை.

மத்திய விவசாய துணை அமைச்சர் திரு. ஆர். வி. சாமிநாதன் கோவையில் நிருபர்களுக்கு அளித்த பேட்டியில் மேற்கண்டவாறு கூறினார்.

தமிழகத்தில் இந்திரா காங்கிரஸ், தி. மு.க.கலப்பு கூட்டு ஆட்சி நிறுவ முடிவுசெய்யப்பட்டிருப்பதாகவும் அவர் கூறினார்.

நிருபர்கள் மத்தியில் அவர் மேலும் பேசுகையில் தொகுதிப்பங்கீடு குறித்து தற்காலிக உடன்பாடு ஏற்பட்டுள்ளதாகவும் விரைவில் இது இறுதியாக்கப்படுவதாகவும் அவர் மேலும் கூறினர்.

இந்திரா காங்கிரஸ் கட்சி ஏன் தனியாகஅரசை அமைக்கக்கூடாது என்று கேட்டதற்கு காலம் இன்னும் கனியவில்லையென்றும் எனவே கூட்டு ஆ[illegible] அமைக்கத் தாங்கள் முடிவுசெய்ததாகவும் திரு. சாமிநாதன் கூறினர். (க)

## புத்தூரில் ரூ. 3,25,000 செலவில் மின்விஸ்தரிப்பு வேலை

(நெல்லியடி)

புத்தூர்க்கிராம சபைக்குட்பட்ட பகுதிகளில் சுமார் 3 லட்சத்து 25 ஆயிரம் ரூபா செலவில் மின்சார விஸ்தரிப்பு வேலைகளை இலங்கை மின்சார சபை மேற்கொள்ளவுள்ளது.

மேற்படி மின்விஸ்தரிப்பு வேலைகளுக்கான நிதி பண்முகப்படுத்தப்பட்ட நிதியிலிருந்து, கோப்பாய் பாராளுமன்ற உறுப்பினர் திரு. சி. கதிரவேற்பிள்ளையினால் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

வன்னியசிங்கம் வீதியில் 45 ஆயிரம் ரூபா செலவிலும், ராசவீதியில் 50 ஆயிரம் ரூபாவிலும் சிறுப்பிட்டி ஞானவைரவர் வீதியில் 25 ஆயிரத்திலும் புத்தூர் ராசவீதியில் 35 ஆயிரம் ரூபா செலவிலும்மின்சார வேலைகள் நடைபெறவுள்ளன.

# எம். ஜி. ஆர். கூறுகிறார் தமிழகத் தேர்தலில் நெடுஞ்செழியனும் தாமும் போட்டியிடுவது நிச்சயம்

சென்னை, மார்ச். 16

நடைபெறவிருக்கும் தமிழ் நாடு சட்டசபைத் தேர்தலில் நானும் திரு. இரா. நெடுஞ்செழியனும் நிச்சயம் போட்டியிடுவோம்.

இவ்வாறு அ. தி. மு.க. தலைவர் திரு. எம். ஜி. இராமச்சந்திரன் தெரிவித்துள்ளார். அவர் மேலும் கூறியதாவது:

அடுத்த தேர்தலில் அ. தி. மு. க. வெற்றிபெற்றால் அது தனித்து நின்று சுயமாக அரசமைக்கும் இதற்கு ஜனதா, [illegible]திய கம்யூனிஸ்ட், மார்க்ஸி[illegible] கம்யூனிஸ்ட் கட்சி[illegible]ளும் இணக்கம் தெரிவித்துள்ளன.

தமிழகத்தின் 234 தொகுதிகளில் அநேக தொகுதிகளில் அ. தி. மு. க. போட்டியிடும்,

### இந்திரா காங்கிரஸுடன் உடன்பாடு இடையாது

இந்திரா காங்கிரஸுடன் அ. தி. மு. க. உடன்பாடு செய்துகொள்ளுமென்ற பேச்சுக்கே இடமில்லை.

அ. தி. மு. க. விலிருந்து விலகிச் சென்றவர்களை மீண்டும் எமது கட்சியில் சேர்த்துக்கொள்ளக் கூடாதென்று கட்சித் தொண்டர்கள் விரும்புகிறார்கள் என்றும் திரு. எம். ஜி. ஆர். கூறினர். (இ)

## பஸ் விபத்து: 9 பேர் பலி!

புதுடில்லி, மார்ச் 16

ஹைதராபாத்தில் நேற்று நடைபெற்ற பஸ் விபத்தில் 9 பேர் ஸ்தலத்திலேயே மாண்டனர். மேலும் 13 பேர் அபாயகரமான நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

ரங்காரட்டி என்னுமிடத்தில் நின்றுகொண்டிருந்த பஸ் திண்டி மீது மரம் ஒன்று வழுந்ததாலேயே இவ்விபத்து நேற்பட்டது. திருமணவிழா ஒவான்றுக்குச் சென்றுகொண்டிருந்த 0 பேர் இந்த பஸ்ஸில் பிரயாணம்செய்தனர். (கு)

# "சோவியத் படைகள் உடன் வெளியேற வேண்டும்"

## ஜப்பான் பாராளுமன்றம் பிரேரணை

டோக்கியோ, மார்ச். 16

ஆப்கானிஸ்தானிலிருந்து சோவியத் யூனியன் துருப்புக்கள் நிபந்தனை எதுவுமின்றி உடனடியாகவெளியேறவேண்டுமென்று ஜப்பான் வலியுறுத்தியுள்ளது.

இது தொடர்பாக ஜப்பான் பாராளுமன்றம் தீர்மானமொன்றை நிறைவேற்றியது.

ஆப்கானிஸ்தானில் சோவியத்யூனியன் இராணுவம் தலையிட்டதால் உலக நாடுகளிடையே சமாதானம் பாதிக்கப்பட்டுள்ளதாகவும்பாராளுமன்றத்தி் நிறைவேற்றப்பட்ட அத்தீர்மானத்தில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

"ஆப்கானிஸ்தானிலிருந்து படைகள் உடனடியாக நிபந்தனை எதுவுமின்றி வெளியேற வேண்டும்" என்று அரசதரப்பினர் கொண்டுவந்த இந்தப் பிரேரணையை ஜப்பான் கம்யூனிஸ்ட்கட்சி ஆதரிக்கவில்லை.

சோவியத்யூனியனின் இந்தத் தலையீட்டை ஜப்பான்முன்னர் எதிர்த்தபோது கம்யூனிஸ்ட் கட்சியும் அந்த எதிர்ப்புக்கு ஆதரவளித்தது குறிப்பிடத்தக்கது. (கு)

## 33 பேரைக்கொன்ற இளைஞருக்கு மரணதண்டனை!

சிக்காக்கோ, மார்ச். 16

சிக்காகோவில் 33 இளைஞர்களைக் கொலை செய்த ஒரு நபருக்கு மரண தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

சிக்காக்கோவில் 72-ம் ஆண்டு முதல் 78ம் ஆண்டு வரை 33 இளைஞர்களைக் கொலைசெய்து அநேகரின் சடலங்களைத் தமது வீட்டு வளவில் புதைத்த ஜோன் கேஸி (38 வயது) என்ற அந்த நபருக்கு எதிர்வரும் ஜூன் மாதம் 2ம் திகதி மின்சாரக் கதிரையில் இருக்க வைத்து மரணதண்டனை [illegible] அமெரிக்க வரலாற்றில் ஒருவர் ஆகக் கூடுதலான மனிதர்களைக் கொலை செய்தது இதுவே முதல் தடவையாகும். (இ)

## நியமனம்

(உடுப்பிட்டி)

வடமராட்சிப் பகுதி சாரணிய உதவி ஆணையாளராக திரு. வ. க. ஈசுரபாதம் நியமிக்கப்பட்டுள்ளார்.

இவர் உடுப்பிட்டி வட்டாரக் கல்வி அதிகாரியாகப் பணியாற்றி வருகிறார் என்பதும் குறிப்பிடத்தக்கது. (அ)

## இன்றைய பலன்

பங்குனி மாதம் 4 ம் திகதி (17-3-1980) திங்கட்கிழமை

மேடம்: நுட்பமான வேலைகளில் ஈடுபடுவீர்கள். அரசியல்வாதிகள் நன்மை பயப்பார்கள். குடும்ப வாழ்விலும் ஒளி பிரகாசிக்கும்.

இடபம்: அவசரப் போக்கினால் அதிகாரிகளைப் பகைத்துக்கொள்ளுவீர்கள். தவறான வழிமூலம் பணம் பறிபோகலாம். முன்னெச்சரிக்கை நன்று.

மிதுனம்: சிலருக்கு வெளிநாடு செல்லும் வாய்ப்பும் ஏற்படலாம். தனிச்சிறப்புமுண்டு. தன்மான வாழ்வுமுண்டு. மகத்தான தினம்.

கடகம்: இதயத்தில்மகிழ்ச்சி பொங்கும். இனசனம் கூடுவர் புத்திரர் பெருமையுண்டு. தொழிலிலும் வெற்றியுண்டு.

சிங்கம்: வேவுகளை தொடுப்பதற்கு எதிரிகள் முனைவர். பணவிடயத்தில் கவனம் செலுத்தவும் வாய்வுப்பதார்த்தங்களை தவிர்க்கவும்.

கன்னி: இனியவை உரைத்தலின் மூலம் மற்றவர்களை வசீகரிப்பீர்கள். குடும்பத்திலும் தலைமைஸ்தானம் கிடைக்கும். செல்வாக்கும் வளர்பிறையாகும்.

துலாம்: ஏக்கத்தின் சாயல் படரும். எதிர்பாராதவிதமாக சிக்கலில் மாட்டிக்கொள்ள நேரிடும். நிதானம் வேண்டும்.

விருச்சிகம்: தொழில்புரியுமிடத்தில் திருப்தி நிலவும். முதியவரின் ஆதரவுகிடைக்கும்.

தனுசு: புதிய முதலீடுகளுக்கு உகந்த தினம். உற்சாகமாகக் கடமையாற்றுவீர்கள். வாழ்க்கையும் வளமாகும்

மகரம்: செய்கருமங்கள் நல்லநிலை பெறும். தொல்லைகள் அதிகம் நீங்கும். வியாபாரத்திலும் மேம்பாடு நடக்கலாம்.

கும்பம்: தனதானிய நஷ்டமுண்டு. தொழில் வீழ்ச்சியுண்டு. உடல்சுகக்குறைவும் தென்படும், சுகாதாரம் வேண்டும்.

மீனம்: வாழ்விலும் புதிர் தோன்றும் தொழில்துறையிலும் சச்சரவுகள் தோன்றலாம். எதையும் தாங்கும் இதயமே நன்று.

சோதிடக்கலாநிதி
திருமலை
க. வேலுப்பிள்ளை


கல்வித் திணைக்களத்தினரால் அங்கீகரிக்கப்பெற்ற

**துணைப் பாட புத்தகங்கள்**

1978ஆம் ஆண்டு தொடக்கம் இலங்கைக் கல்வித் திணைக்களத்தினரால் துணைப் பாடபுத்தகங்களாகப் பாடசாலைகளில் உபயோகிப்பதற்குச் சுற்றுநிருப மூலம் அங்கீகரிக்கப்பெற்ற பாட புத்தகங்கள்:

இலக்கிய மஞ்சரி III – 3ஆம் வகுப்பு
இலக்கிய மஞ்சரி IV – 4ஆம் வகுப்பு
இலக்கிய மஞ்சரி V – 5ஆம் வகுப்பு
குசேலர் சரிதம் 6ஆம் வகுப்பு
மூதுரை (வாக்குண்டாம்) – "
இலக்கிய வழி (பாடநூல்) க. பொ. த. உயர்தரம்
இரட்சணிய யாத்திரிகம் - கடைதிறப்புப் படலம்

**சுன்னாகம்: தனலக்குமி புத்தகசாலை**
ஏனைய புத்தகசாலைகளிலும் பெற்றுக்கொள்ளலாம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ராஜா (யாழ்ப்பாணம்) தினசரி 4 காட்சிகள்
சிவாஜி-விஜயா-சந்திரமோஹன் கவிதா நடித்த
ஜெனரல் சக்கரவர்த்தி
(ஈஸ்மன்ட் கலர்)

ராணி (யாழ்நகர்) தினசரி 4 காட்சிகள்
இல்லறம் இன்பமாக விளங்க "இருவர் உள்ளம்"
இணையவேண்டிய அவசியத்தை விளக்கும்
இணையற்ற குடும்பச் சித்திரம்
சிவாஜி கணேசன்-சரோஜாதேவி-எம்.ஆர். ராதா
பாலாஜி-ரங்கராவ் இன்னும் பலர் நடித்த
இருவர் உள்ளம்
(புதிய பிரதி)
திரைக்கதை வசனம்: கலைஞர் கருணாநிதி

சாந்தி யாழ்நகர் போன்: 7642
தினசரி: 10-30, 2-30, 6-30, 9-45 காட்சிகள்
கமல் - சுஜாதா - ஸ்ரீகாந்த் - ஜெய்சங்கர்
தேங்காய் சீனிவாசன் - மனோரமா
உயர்ந்தவர்கள் (புதிய பிரதி)

மனோஹரா A யாழ்ப்பாணம் தினசரி 4 காட்சிகள்
காமினி பொன்சேகா, அனுலா கருணாதிலக
யக்கடையா
(சிறந்த சிங்கள சண்டைப்படம்)

வெலிங்டன் (யாழ்ப்பாணம்) தினசரி 4 காட்சிகள்
சஞ்சீர் (ஹிந்தி) SANJEER
லிடோ (யாழ். நகர்) Daily: 10-30, 3-30, 6-30 & 9-30 போன்: 7698
ARABIAN ADVENTURE
(Color)

GRAND GALA RELEASE
REGAL JAFFNA Phone: 300
Daily at 10-30 a. m 2-00, 4-30, 7-00 & 9-30 p m.
Daily 5 Shows
From the Jungles of the Caribbean... to the streets of New Orleans
The evil of Mr Big... and the Mystery of Solitaire
007 is where the action is...
ROGER MOORE as JAMES BOND
Ian Fleming's
LIVE AND LET DIE


More Suited for Adults
All Passes Suspended

வின்ஸர் 3வது ஜனத்திரள் வாரம்! (யாழ்ப்பாணம்)
தினசரி 10-30, பி. ப. 2-30, 6-15, இரவு 9
நாகேஷ்-முத்துராமன்-சௌகார் ஜானகி
"எதிர் நீச்சல்" (புதிய பிரதி)
21-3-80 முதல்
சுதாகர்-ராதிகா-ரதி நடித்த
நிறம்மாறாத பூக்கள்
டைரக்டர் - பாரதிராஜா

## 'ஹூட்--பாச்' சின்னம் பெற்றார்

(யாழ்ப்பாணம்)

உயர்ந்த சாரணப் பயிற்சி பெற்றதற்கான 'ஹூட் பாச்' சின்னத்தை நீர்வேலி வடக்கைச் சேர்ந்த திரு. மா. புவனேந்திரன் பெற்றுள்ளார்.

யாழ். மாவட்ட ஆணையாளர் திரு. சி. கந்தமூர்த்தி மேற்படி சின்னத்தை திரு. புவனேந்திரனுக்கு வழங்கினார்.

திரு. புவனேந்திரன் யாழ். மாவட்டச் சாரணர் சங்கச் செயலாளராகக் கடந்த 3 வருடங்களாகச் செயலாற்றி வருகிறார். திரு. புவனேந்திரன் சாரணர் குருளைச் சாரணர் இயக்கம் தொடர்பான பல சஞ்சிகைகளை வெளியிட்டுள்ளதுடன் மரம் நாட்டும் இயக்கம் சாரணர்களுக்கெனப் பிரத்தியேகமான விமானப் பயணம் முதலியவற்றையும் ஒழுங்கு செய்து நடாத்தியுள்ளார். இவர் வண்ணார்பண்ணை வைத்தீஸ்வர வித்தியாலத்தின் [illegible]வராவார். [சா-அ]

......

## அறுவடை விழா

(மன்னார்)

முருங்கன் மெதடிஸ்த சபை நடத்திய ஜீவோதயம் விவசாயப் பண்ணையில் அறுவடை விழா மிகவும் சிறப்பாக நடைபெற்றது.

இவ் விழாவை இலங்கை மெதடிஸ்த திருச்சபைத் தலைவர் வண. பிதா இராஜசிங்கம் முறைப்படி ஆரம்பித்துவைத்தார். அறுவடை விழாவில் கலந்துகொண்ட மன்னார் அரசாங்க அதிபர் திரு. கபிலஸ் பெர்னாண்டோ விவசாயப் பண்ணைப் பொருட்களின் விற்பனையை ஆரம்பித்து வைத்தார்.

ஹரன் யாழ்ப்பாணம்
தினசரி 4 காட்சிகள்
ஜெய்சங்கர் - ஜெயா
முத்துராமன் - லக்ஷ்மி
கனிமுத்துப் பாப்பா
(புதிய பிரதி)

நாகம்மாள் (சுன்னாகம்)
தினசரி 6-45, 9-45
சனி, ஞாயிறு 2-45
சிவாஜி-ஜமுனா
பொம்மைக் கல்யாணம்

வெஸ்லி (மானிப்பாய்)
தினசரி 6-30, 9-30
சனி, ஞாயிறு 2-30
விஜயகுமார்-ஜெயசித்ரா
தாயில்லாக் குழந்தை



ஈழத்தின் முதல் வண்ணப்படமான "இரத்தத்தின் இரத்தமே" படத்தில், தமிழக நடிகர் ஜெய்சந்திரனும், ஈழத்து நடிகை அஜேஜராவும் தோன்றும் ஒரு காட்சி.

## எட்கர் கிலேமன்ட் யாழ். விஜயம்

(யாழ்ப்பாணம்)

பிரித்தானிய சாரணர் இயக்கத்தைச் சேர்ந்த எட்கர் கிலேமன்ட் (80 வயது) இலங்கைக்கு விஜயம் செய்துள்ளார்.

யாழ்ப்பாண மாவட்ட ஆணையாளர் திரு. சு. சுந்தரமூர்த்தி, உதவி மாவட்ட ஆணையாளர் திரு. ஜே. என். பொன்னையா, வெளிக்கரும ஆணையாளர் திரு. பி. சிறீஸ்கந்தராசா, திரிசாரணர் தலைவர் திரு. இ. தவகோபால் ஆகியோர் திரு. எட்கர் கிலேமன்டை வரவேற்று யாழ்ப்பாணத்திற்கு அழைத்து வந்து யாழ் மாவட்டத்திலுள்ள சாரணர் இயக்கங்களையும் இயற்கைவளங்களையும் சுற்றிக் காண்பித்தனர். (கொ)

## சைக்கிள் திருட்டு வழக்கு: தீர்ப்பு ஒத்திவைப்பு

(யாழ்ப்பாணம்)

பல சைக்கிள்களைத் திருடி வைத்திருந்ததாகப் பொலிசாரால் தாக்கல் செய்யப்பட்ட வழக்கில் எதிரி திருட்டுச் சைக்கிள்களை வைத்திருந்ததை ஒப்புக் கொண்டதைத் தொடர்ந்து, நீதவான் தீர்ப்பு வழங்குவதை இம்மாதம் 27ம் திகதிக்கு ஒத்திவைத்துள்ளார்.

யாழ்ப்பாணத்தின் பல பகுதிகளிலும் சைக்கிள் திருட்டில் ஈடுபட்டதாகவும், திருடிய சைக்கிள்களில் ஐந்தை வைத்திருந்ததாகவும் சண்டிலிப்பாய் வடக்கைச் சேர்ந்த ஆனந்தசுந்தரம் பாலசுப்பிரமணியம் (35 வயது) என்பவருக்கு எதிராக யாழ் பொலிசார் யாழ். நீதிமன்றத்தில் வழக்கொன்றைத் தாக்கல் செய்திருந்தனர். இவ்வழக்கு நேற்று யாழ். நீதிமன்றத்தில நடைபெற்றபோது எதிரி திருட்டு சைக்கிள்கள் ஐந்தை வைத்திருந்ததை ஏற்றுக் கொண்டார்

நீதிபதி திரு. சி. யோகநாதன் எதிரியின் கைவிரல் அடையாளத்தை எடுக்கும்படி உத்தரவிட்டு தீர்ப்பு வழங்குவதை இம்மாதம் 27ம் திகதிக்கு ஒத்திவைத்தார்.

எதிரி பிணையில் செல்ல அனுமதிக்கப்பட்டார். பொலிஸ் தரப்பில் திரு. எஸ். குணரத்தினம் வழக்கை நடத்தினார். (கொ)

SRIDHAR - Jaffna
Daily 5 Shows at 10-30 a.m. 2-30, 4-45, 7-00, 9-30 p.m.


FRED WILLIAMSON in
THAT MAN BOLT
WITH
MIKE STONE — World Professional Light Heavy weight Karate Champion
KEN KAZAMA — Japan Kick-Boxing Champion
EMIL FARKAS — European Black Belt Karate Champion
DAVID CHOW — Former California State Judo Champion
BIG NAME IN KARATE
"That Man Bolt"
BIG NAME IN POWER, STRENGTH AND VIGOUR
"That Man Bolt"
BIG NAME IN ENTERTAINMENT
"That Man Bolt"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Dilka Watch Works
SPECIALIST IN WATCH REPAIRING
யாழ் நகரில் சகலவித மணிக்கூடுகளையும் சிறந்த முறையில் திருத்திக்கொள்ள...
டில்கா வாச் வேக்ஸ்
பஸ் நிலைய எதிர் மேல்மாடி
404/1, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

RECEIVED 1980 .3.17 PERIODICALS DIVISION LIBRARY

ஈழநாடு 50 சதம்
The EELANAADU

## தபால் கட்டணம் அதிகரிப்பு

(கொழும்பு)

தபாற் கட்டணங்கள் இன்று முதல் அதிகரிக்கப்படவுள்ளன.

சாதாரண தபால்களுக்கான கட்டணங்கள் 25 சதத்திலிருந்து 35 சதமாகவும், தபாலட்டைகள் 25 சதமாகவும் அதிகரிக்கப்பட்டுள்ளன; பதிவுத் தபால்களுக்கான கட்டணங்கள் அதிகரிக்கப்படவில்லை. (கு)

## ஈரான் இஸ்லாமிய நீதிமன்ற வழக்குத்தொடுநர் ராஜினமா!

(தெஹ்ரான்)

ஈரானின் இஸ்லாமிய நீதிமன்றத்தின் பிரதமவழக்குத்தொடுநர், தமது பதவியிலிருந்து ராஜினமாசெய்துள்ளார்!

இதுசம்பந்தமான கடிதத்தை இவர், மதத்தலைவர் கொமெய்னிக்கு அனுப்பி வைத்துள்ளார்.

பணயக் கைதிகள் சம்பந்தமாக வெளிநாட்டமைச்சருக்கும் இவருக்குமிடையே ஏற்பட்ட கருத்துவேறுபாடு காரணமாகவே பிரதம வழக்குத்தொடுநர் ராஜினமாசெய்துள்ளதாக தெரிவிக்கப்பட்டது.

## 'கடலில் மிதத்தல்' சாதனை முயற்சி; யோகரத்தினம் மீண்டும் ஆரம்பிப்பார்

(யாழ்ப்பாணம்)

வல்வெட்டித்துறையைச் சேர்ந்த திரு. துரைராஜா யோகரத்தினம் [35 வயது] கைகளையும், கால்களையும் கட்டியநிலையில் எழுபத்தைந்து மணிநேரம் கடலில் மிதக்கும் புதிய உலகசாதனைமுயற்சியை அடுத்தவாரம் ஆரம்பிக்கவிருக்கிறார்.

வல்வெட்டித்துறையிலுள்ள விளையாட்டுக் கழகங்களின் ஒத்துழைப்புடன் மேற்கொள்ளப்படும் புதியசாதனை முயற்சிக்கு இலங்கை நீச்சல்கழகம் லயன்ஸ் கழகம், வை. எம். சி. ஏ. போன்ற கழகங்கள் மத்தியஸ்தம் வகிக்கவுள்ளன.

திரு. துரைராஜா யோகரத்தினம் கடல்நீரில் வல்வெட்டித்துறைசுங்கத்திணைக்களத்துக்கு முன்பாக கடந்த வருடம் ஏப்ரல் 18-ந்திகதி சுமார் 50 மணித்தியாலங்கள் தொடர்ச்சியாக பல நிலைகளிலும் மிதந்து சாதனையை நிலைநாட்டியிருந்தார்.

அனைத்துலகநாடுகளின் தூதுவராலயங்களுக்குத் தனித்தனியாக சவால்கள் விடுக்கப்பட்டதைத் தொடர்ந்து இம்மாதம் 28-ந் திகதி காலை வல்வெட்டித்துறை சுங்கத் திணைக்களத்துக்கு முன்பாகவுள்ள கடலில் சாதனை முயற்சியை ஆரம்பிப்பார்.

கைகளை , காகளையும் கட்டியநிலையில் மிதத்தல், யோகாசனங்களைச் செய்தல், நர்லுள் நடத்தல்போன்ற பல நிலைகளில் 'மிதத்தல் சாதனையை' 75 மணித்தியாலங்கள் செய்து ஒரு புதிய உலக சாதனையை நிலைநாட்டத் திட்டமிட்டுள்ளார்.

## யாழ்ப்பாணத்தில் பாண் மா விற்பனை வீழ்ச்சி

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்தில் மா, பாண் விற்பனை பெருமளவில் குறைந்துள்ளது. பாவனையாளர்கள் பலகாரங்களுக்கு அரிசி மாவைப் பாவிப்பதே இதற்குக் காரணம் என்று கூறப்படுகிறது.

ப. நோ. கூ. சங்கத்தில் மாவிலும் பார்க்க அரிசி குறைந்த விலைக்குக் கிடைப்பதால், பாவனையாளர்கள் அரிசியையே வாங்கி, பலகாரம் செய்து வருகின்றனர்.

வழக்கமாகக் காலையில் பாணை மட்டும் பாவித்து வந்த குடும்பங்கள் கூட காலையில் அரிசிமா உணவையே நாடியுள்ளனர். இதனுல் கடைகளில் பாண் விற்பனையாகமலிருக்கிறது.

சில கடைகளில், முதல் நாள் காலையில் வந்த பாண் மறு நாள் காலை புதுப்பாணுடன் சேர்த்து விற்பனைக்கு வைக்கப்பட்டிருப்பதாகக் கூறப்படுகிறது.

யாழ்ப்பாணத்திலுள்ள வீடுகளில் கோதுமை மா பாவிப்பு நாளுக்கு நர்ள் குறைந்து வருகின்றது. இந்த நிலை நீடித்தால், மாவின் பாவனை எதிர் காலத்தில் முற்ருக அற்றுப் போகும் என்று கூறப்படுகின்றது. (அ)

## வலதுகுறைந்...

[1-ம் பக்கத்தொடர்ச்சி]

கீழ் அமைக்கப்பட்டுள்ளது. இந்நிலையத்தை மூன்ருண்டுகளில் பூரணப்படுத்தத் திட்டமிட்டுள்ளோம். இதற்குபெருந்தொகையான நிதி தேவை. அதற்கு சகல இனமக்களும் உதவவேண்டும்'' என்ருர்.

யாழ். மாவட்ட சமூகசேவை உதவி ஆணையாளர் திரு. க. கெங்காதரன் உரையாற்றுகையில்:- ''இன்று யாழ். லயன்ஸ் கழகத்தினர் ஊனமுற்றவர்களுக்கான புனர்வாழ்வு நிலையமொன்றை ஆரம்பித்துவைப்பதன் மூலம் யாழ். மாவட்டத்தில் சமூகசேவைப்பணியின் சரித்திரத்தில் இருந்துவந்த குறை நீங்கி வருகின்றது. 1965-ம் ஆண்டு யாழ். லயன்ஸ் கழகத்தினர் 'உதவும்கரங்கள்' என்னும் பயனுள்ள திட்டத்தின் மூலம் மூன்றுசில்லு வண்டிகளை ஊனமுற்றவர்களுக்கு வழங்கினர். அந்தத் திட்டத்திலேயே அவர்களுக்கு வாழ்வளிப்பதற்காக ஒரு திட்டத்தையும் அமைத்துக்கொடுத்தமையை பாராட்டுகின்றேன் என்று கூறினர்.

ஊனமுற்றவர் சார்பில் உரையாற்றிய அளவெட்டி இ. குணசிங்கம் ''எமக்காக உதவியவர்கள் யாழ். லயன்ஸ் கழகமும், சமூகசேவைப் பகுதியும் தான் என்பதை கூறிக்கொள்கிறேன். எம்மைப்பற்றி எல்லோரும் பேசுவார்கள். ஆனல் எந்த வாழ்வுக்காக ஒருவரும் பேசுவதில்லை. எமக்கு கைத்தொழில்களைக்காட்டி சுயமாக சம்பாதித்து நிம்மதியுடன் நாம் வாழ்வதற்கு வழியைக் காட்டுமாறு உங்களைப் பணிவாகக் கேட்கின்ருேம்'' என்ருர்.

வைபவத்தில் வைத்து தொழிலதிபர் திரு. க. கனகராஜா ஊனமுற்றவர்களுக்கு பனை ஓலைவாரும் இயந்திரத்தையும் அவர் படிப்பதற்கான நூல் தொகுதியையும் வழங்கினர்.

முன்னைநாள் பேராசிரியர் கே. நேசையா, வண. பிதா பி. வி. இராஜசிங்கம் ஆகியோரும் உரையாற்றினர் (செ)

## திருப்பாடு காட்சிகள்

(மன்னர்)

பேசாலை வெற்றிமாதா ஆலயத்தில் இம்மாதம் 26, 27, 28ந் திகதிகளில் திருப்பாடு (பபஸ்) காட்சிகள் காண்பிக்கப்படும். திருப்பாடுகள் காட்சிகள் காட்டுவதற்கான மண்டபம் பல லட்சம் ரூபா செலவில் நவீன முறையில் புனர்நிர்மாண வேலைகள் செய்யப்பட்டுள்ளன. திருப்பாடு காட்சிகளைக் காண்பதற்கு நாட்டின் பல பகுதிகளிலிருந்து ஏராளமான மக்கள் வருவார்களென எதிர்பார்க்கப்படுகின்றது.

## றேயல்- சென் ஜோன்ஸ் இன்று மோதும்

(யாழ்ப்பாணம்)

கொழும்பில் இருந்து நேற்று யாழ்ப்பாணம் வந்த றேயல் கல்லூரி முதலாம் பிரிவு கிரிக்கட்குழு, இன்று காலை 10 மணிக்கு யாழ் பரியோவான் கல்லூரிக்கு எதிராக 50 ஓவர் போட்டியில் கலந்து கொள்ளும்.

பரியோவான் மைதானத்தில் ஆட்டம் நடைபெறும்.

கடந்த சனியன்று கொழும்பில், றேயல்- சென்தோமஸ் கல்லூரிக்கிடையில் நடைபெற்ற மட்டுப்படுத்தப்பட்ட 50 ஓவர் கிரிக்கட்போட்டியில் றேயல் - கல்லூரி வற்றியீட்டியது தெரிந்ததே. (இ)

## கான்ஸ்டபிள் ...

[1ம் பக்கத் தொடர்ச்சி]

யோர் சந்தேகத்தின் பேரில் கைதுசெய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டனர்.

நேற்று இச் சந்தேகநபர்களை பருத்தித்துறை நீதவான் திரு. கே. எஸ். மகேசன் முன்னிலையில் அடையாள அணிவகுப்புக்குட் படுத்திய போது சம்பவதினம் . கணேசலிங்கத்தின் இல்லத்தில் கடமையில் இருந்த பொலிஸ் கான்ஸ்டபிள் இரண்டாவது சந்தேகநபரை அடையாளம் காட்டினர்.

இதனைத் தொடர்ந்து நீதவான் இதுதொடர்பான விரிவான அறிக்கையைச் சமர்ப்பிக்குமாறும் அல்லது வழக்குத் தாக்கல்செய்யுமாறு பொலிசாரைப் பணித்தார்.

நீதிமன்றத்தில் நேற்று முன்தினம் பலத்தகாவல்இடப்பட்டிருந்தது. (கு)

## 15பேர்மீது வழக்கு

(யாழ்ப்பாணம்)

கட்டுப்பாட்டு விலையிலும் பார்க்க கூடிய விலையில் யானை மார்க் சோடாவை விற்பனை செய்ததாக 15 கடைக்காரர்களைப்பொலிக்ார் கைதுசெய்து விசாரணைக்குட்படுத்தினர்.

யாழ். பொலிஸ் நிலையத்தைச் சேர்ந்த உதவிப்பொலிஸ் இன்ஸ்பெக்டர்களான திருவாளர்கள் பிரேம்லால்' விக்கிரமசிங்கா, சரத்சந்திராஆகியோர் கடந்த வியாழக்கிழமை கூட்டாக நடத்திய திடீர்வேட்டையின் போதே யாழ். நகரிலுள்ள 15 கடைகளில் 1 ரூபா 42 சதமாக விற்கவேண்டிய யானைச் சோடாவைக் கூடுதல் விலைக்கு விற்றது கண்டுபிடிக்கப்பட்டதாம்.

இக்கடைக்காரர்களுக்கு எதிராக வழக்குத்தாக்கல் செய்யப்படவுள்ளது. [கொ-அ]

சீ-நோர் வலைத் தொழிற்சாலை
குருநகர்.
ஏல விற்பனை
கடுதாசிக் குழாய்கள், பழுதடைந்த வலைகள், நூல் இழைகள் முதலியன பகிரங்க ஏலத்தில் விற்கப்படும்.
இடம்: சீ-நோர் வலைத்தொழிற்சாலை, குருநகர், யாழ்ப்பாணம்.
காலம்: 18-3-80. காலை 10 மணி.
உற்பத்தி முகாமையாளர்.
5244

மக்கினென் டிரவல் சேர்விஸ் (இலங்கை) லிமிட்டெட்
உங்களை
திருச்சிராப்பள்ளி, மதுரை, பம்பாய், கோலாலம்பூர், சிங்கப்பூர், பாரிஸ், லண்டன், துபாய், சவூதி அரேபியா, கனடா ஆகிய நாடுகளுக்கு அழைத்துச் செல்ல
மற்றும்
பாஸ்போட், அமெரிக்கன் டிறவலர்ஸ் செக், உலகின் எப்பகுதிக்கும் விமான டிக்கட், சுற்றுலாக்கள் ஆகிய உங்கள் தேவைகளை
கொழும்பு செல்லாமலே யாழ்ப்பாணத்தில் ஒழுங்கு செய்துகொள்ள
இன்றே தொடர்பு கொள்ளுங்கள்
மக்கினென் டிரவல் சேர்விஸ் (இலங்கை) லிமிட்.,
தபால் பெட்டி இல: 92
8, பருத்தித்துறை வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 8154
பயணம் உங்களது! - சௌகரியமாக்குவது எங்களது!!

## மரண அறிவித்தல்

### திருமதி நற்குணம் இராசையா

நல்லூர் செம்மணி வீதியைச் சேர்ந்த இளைப்பாறிய அதிபர் திருமதி நற்குணம் காலமாகிவிட்டார். இவர் காலஞ்சென்ற இராசையாவின் அன்பு மனைவியும், குணராசன் (மக்கள் வங்கி முகாமையாளர்-மன்னர்), சந்திரராஜன் (ஜேர்மனி), இந்திராணி ஆகியோரின் அன்புத் தாயாரும், இந்திரா, பேட்டி லோறன்ஸ் (சவுதி அரேபியா) ஆகியோரின் அன்பு மாமியாரும், அருணசோமசுந்தரம், கனகம் றட்ணசிங்கம் (ஆசிரியை), யோன் இராசையா (பொரளை). காலஞ்சென்ற யோசேப் செல்வம், காலஞ்சென்ற வண. பெஞ்சமின் கணகரட்ணம், காலஞ்சென்ற வில்லியம் சனகசிங்கம் ஆகியோரின் அன்புச் சகோதரியும் செல்லையா றிச்சேட் இராசதுரை (உரிமையாளர் ஏசியஸ்ரிக் காட்வெயர் ஸ்ரோர்-கொழும்பு) செல்லையா எட்வேட் சின்னத்துரை (உதவி அரசாங்க அதிபர் கந்தோர், கோப்பாய்) ஆகியோரின் அன்புச் சிறிய தாயுமாவார்.

அன்னரின் பூதவுடல் இன்று (17-3-80) மாலை 4-00 மணிக்கு அன்னரின் இல்லத்தில் இருந்து நல்லடக்கத்துக்காக நல்லூர் சென் யேம்ஸ் சேமக்காலைக்கு எடுத்துச் செல்லப்படும். உறவினர்களும் நண்பர்களும் இவ்வறிவித்தலை ஏற்றுக்கொள்ளவும். 5248

இப்பத்திரிகை ஈழநாடு லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் நாவலர்கோவிக் கேற்று வீதி 63-ம் இலக்க அச்சகத்தில் மார்ச்மாதம் 17-ந் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.
Registered as a Newspaper at the General Post Office Sri Lanka under No QD/3940/78 The Eelanadu F. B. No. 49, Telegram Eelanadu Phone 8541

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org